பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 13 புதன்கிழமை (28-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:182

## 'றோ' உயர் அதிகாரி நேற்று திடீரென யாழ்.விஜயம்!

யாழ்ப்பாணம்,மே28

இந்திய உளவு அமைப்பான 'றோ' வின் உயர் மட்ட அதிகாரி ஒருவர் நேற்று யாழ்ப்பாணம் வந்து திரும்பினார் என்று தெரிய வருகின்றது.

'றோ'வின் இரண்டாவது நிலை அதிகாரியும் மற்றும் சிலரும் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் விசேட ஹெலிகொப்டர் ஒன்றில் திடீரென யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வந்து இறங்கினர் எனக் கூறப்படுகின்றது.

பின்னர் வாகனம் ஒன்றில் சாவகச்சேரிப் பகுதிக்கு அவர்கள் சென்றனர் எனவும் அறிய வந்தது.

'றோ' உளவு அதிகாரியுடன் இந்தியத் தூதரகத்தின் உயர்மட்ட அதிகாரி ஒருவரும் ஹெலிகொப்டரில் யாழ்ப்பாணம் வந்து இறங்கினார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

துரையப்பா விளையாட்டரங்கில் திடீரென ஹெலி வந்து இறங்கிச் சென்றது. அதனால் விசேட பிரமுகர்கள் அதில் வந்தார்களா என்பதைப் பிரதேச வாசிகளோ அல்லது செய்தியாளர்களோ நேரடியாக உறுதிப்படுத்த வாய்ப்புக்கிட்டவில்லை.

ஹெலிகொப்டர் வந்து இறங்கிப் போவதற்கும் அதில் வந்த பிரமுகர்களுக்கும் சீருடையினர் விசேட பாதுகாப்பு வழங்கினர். (ஐ)

### அமெரிக்க தூதரக அதிகாரி இன்று வருகிறார்

யாழ்ப்பாணம்,மே28

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் அரசியல் பிரிவு அதிகாரியான கிறிஸ் லோங் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

யாழ்நிலைமையை அறியும் நோக்குடன் இங்கு வருகை தரும் அவர், அரச அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதனையும் பிரதித் தேர்தல் ஆணையாளர் எஸ்.நடராசாவையும் அவர் இன்று முற்பகல் 10 மணிக்கு சந்திக்கின்றார்.

# புலிகளுக்கு பிரதமரின் பதில் நேரடிக் கையளிப்பு இல்லை!

## மின் அஞ்சலிலேயே இன்று அனுப்பி வைப்பு

கொழும்பு,மே28

**வடக்கு, கிழக்குக்கு அதிக அதிகாரங்களுடன் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தேவை என்ற புலிகளின் கோரிக்கை தொடர்பாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பதில் புலிகளுக்கு மின் அஞ்சல் (e-mail) மூலமே அனுப்பப்படும்.**

**புலிகளுக்கான இப்பதிலை நோர்வேத் தரப்பு நேரடியாக எடுத்துச்சென்று அவர்களிடம் வழங்கும் என்று பல்வேறு தகவல்கள் கடந்த இரு நாள்களாக வெளிவந்த வண்ணம் இருந்தன. ஆனால், அப்படி யாரும் அந்தச் செய்தியை எடுத்துச் செல்லமாட்டார்கள். அது மின் அஞ்சல் மூலமே புலிகளுக்கு அனுப்பப்படும் என்று தற்போது தெரியவந்துள்ளது.**

பிரதமரின் பதிலை நேரடியாக எடுத்துச் சென்று புலிகளின் முக்கியஸ்தர்களிடம் கையளித்து அவர்களின் பதிலையும் உடனடியாகப் பெற்று வருவதற்கு அரசு மற்றும் ஏற்பாட்டாளர்கள மட்டத்தில் அவசரம் காட்டப்பட்டது.

கடந்த ஞாயிறன்று கொழும்பு வந்த நோர்வே அனுசரணைக் குழுப் பிரமுகர் எரிக் சொல்ஹெய்ம் வந்த கையோடே பிரதமரைச் சந்தித்து புலிகளுக்கான பிரதமரின் பதில் குறித்து

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப்பரிசில் பரீட்சை டிசெம்பருக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,மே28

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருந்த இப்பரீட்சை டிசெம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலன் கருதியே இந்தப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் மேலும தெரிவித்தார்.

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தென்மாகாணத்துக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்ட அமைச்சர், அங்குள்ள பெற்றோர்களின் வேண்டுகோளின் பேரிலேயே இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

### யாழ்.முதலாம் குறுக்குத் தெருவில்

## ஐஸ் தொழிற்சாலை நிறுவ படையினர் அனுமதி மறுப்பு!

யாழ்ப்பாணம்,மே28

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் யாழ்.முதலாம் குறுக்கு வீதியில் ஐஸ் தொழிற்சாலை அமைக்க அனுமதி வழங்க முடியாது என்று பலாலி படைத் தலைமையகம் நேற்று அறிவித்துள்ளது.

அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இந்த ஐஸ் தொழிற்சாலை அமைவதால் பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த முடிவு எடுக்கப்படுவதாக யாழ்.படைத்தளபதி சார்பாக கேணல் செனவிரத்ன யாழ்.செயலகத்துக்கு நேற்று அறிவித்துள்ளார்.

ஐஸ் தொழிற்சாலை அமைப்பதற்கான அனுமதியை தரும்படி கோரி சமாசம் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்தத் தொழிற்சாலையை உரிய இடத்தில் ஆரம்பிப்பதற்கு அனுமதிக்கும்படி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பலாலி இராணுவத்தளபதிக்கு கடந்த 15 ஆம் திகதி கடிதம் மூலம் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## புலிகளின் கோரிக்கைக்கு இலங்கை அரசு நெகிழ்ச்சிப் போக்கைக் காட்ட வேண்டும்!

### நோர்வேப் பிரதமர் ரொய்ட்டருக்கு செவ்வி

கொழும்பு,மே28

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு இலங்கை அரசு தனது நிலைப்பாட்டில் நெகிழ்ச்சிப் போக்கை காட்டவேண்டும் என்று நோர்வேப் பிரதமர் கேஜெல் மக்னே பொண்டேவிக் தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள நோர்வேப் பிரதமர் டோக்கியோவில் வைத்து ரொய்ட்டருக்கு அளித்த செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

புலிகளின் கோரிக்கை தொடர்பாக இலங்கை ஜனாதிபதியின் நிலைப்பாட்டை நான் அறிந்துள்ளேன். ஆனால், சமாதான முயற்சிகளை இலங்கை அரசே முன்னெடுத்துச் செல்வதால் இந்த விடயத்தில் முன்னேற்றம் இருக்கும் என்று எனக்கு நம்பிக்கை உண்டு.

- இவ்வாறு நோர்வேப் பிரதமர் ரொய்ட்டருக்கு அளித்த செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## கிரனேட்டை வெடிக்க வைத்து படைச் சிப்பாய் தற்கொலை!

### தென்மராட்சிப் பகுதியில் சம்பவம்

தென்மராட்சி,மே28

தென்மராட்சிப் பகுதியில் பணியாற்றிய படைச் சிப்பாய் ஒருவர் நேற்று கிரனேட்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்துகொண்டார்.

தனங்களப்பு - கோவிலாக்கண்டிப பகுதியில் பணியில் இருந்த சிப்பாய் ஒருவரே கிரனேட்டை மார்புடன் சேர்த்து அணைத்தவாறு வெடிக்க வைத்து தற்கொலை செய்துள்ளார் என்று கூறப்படுகிறது.

52 ஆவது படையணியில் பொறியியல் பிரிவில் பணி புரியும் எஸ்.கே. திஸநாயக்க என்பவரே இவ்வாறு மரணமாகியுள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் பாவிக்கும் கட்டடங்களின் விவரம் சேகரிக்கும் பணி இன்று ஆரம்பம்

### புலிகள் பிரதிநிதிகள் கலந்துகொள்ளமாட்டார்கள்

யாழ்ப்பாணம்,மே28

குடாநாட்டில் படையினர் நிலைகொண்டிருக்கும் பாடசாலைகள் மற்றும் பொதுக் கட்டடங்களின் விவரங்களைச் சேகரிக்கும் பணி இன்று ஆரம்பமாக இருக்கிறது. எனினும், இந்தப் பணியில் அரசு மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புகளின் பிரதிநிதிகள் இன்று கலந்துகொள்ளமாட்டார்கள் எனத் தெரியவருகின்றது.

சிரானின் யாழ். மாவட்ட துணைக் குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி இந்த விவரம் சேகரிக்கும் பணிக்கு ஏற்பாடாகியுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, படையினர்,அரச அதிகாரிகள், விடுதலைப் புலிகள் ஆகிய தரப்பு

(14ஆம் பக்கம் பார்க்க)

தேசிய சேமிப்பு வங்கி வழங்கும் வீடமைப்புக் கடன்




- 12%, 13%, 14% கவர்ச்சியான வருடாந்த வட்டி.
- 30 ஆண்டுகள் நீடித்த கடன் மீள் செலுத்தும் காலம்.
- கடனை திரும்பச் செலுத்துவதற்கான ஆகக்கூடிய வயது 65 ஆகும்.
- மறைமுக நிபந்தனைகளோ கட்டணங்களோ இல்லை.
- தலைமையகத்தில், 4 நாட்களில் கடன்களைப் பெறும் "துரித சேவை" வசதி

NSB
உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

மேலதிக தகவல்கள் 075-332439 அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்.மாவட்ட மக்களின் நிவாரணத்துக்காக

# கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரிசி கொள்வனவு செய்வதை எதிர்த்து மனு!

யாழ்ப்பாணம்,மே28

குடாநாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்க ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் அரிசியைக் கொள்வனவு செய்வது என்று எடுக்கப்பட்ட முடிவுக்கு எதிராக இடைக்காலத் தடை விதிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை கொள்வனவு செய்யும் பணியை யாழ்.மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களிடம் ஒப்படைப்பது என்று யாழ்.செயலகம் அண்மையில் முடிவு செய்திருந்தது.

இந்த முடிவுக்கு எதிராக இடைக்காலத்தடை விதித்து உத்தரவிடுமாறு கோரி 'மாக்பெட்'நிறுவனம் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தது.

நிவாரணத்துக்கான அரிசியை இந்த நிறுவனமே கொழும்பில் கொள்வனவு செய்து இங்கு அனுப்பிவந்தது.

இந்த மனுவில் புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சுச் செயலர் எஸ்ஜெயரத்தினம், யாழ்அரச அதிபர் எஸ்.பத்மநாதன் செயலகத் திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை, கூட்டுறவு அமைச்சுச் செயலர் குளுகல்ல ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனு மீதான விசாரணைகள் கடந்த 26 ஆம் திகதி நடைபெறும் என்றும் -

அன்றைய தினம் நீதிமன்றில் ஆஜராகும்படியும் கோரி நீதிமன்றத்தால் அனுப்பப்பட்ட 'சமன்ஸ்' கடிதம 26 ஆம் திகதியே யாழ்.செயலகத்துக்கு கிடைத்தது. இதன் காரணமாக யாழ்.அரச அதிபரோ, திட்டப் பணிப்பாளரோ குறித்ததினத்தில் நீதிமன்றில் சமுகமளிக்க முடியாமற் போனது. (ஐ-3)

# தென்பகுதி மக்களுக்காக பிரார்த்தனை நடத்துங்கள்!

### நல்லை ஆதீன முதல்வர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மே28

வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களின் வாழ்க்கை நிலை விரைவில் வழமைகுத் திரும்ப, தெய்வ ஆசி வேண்டி இந்து மக்கள் அனைவரும் ஒரு வார காலத்திற்கு தத்தமது வீடுகளில் வழிபாடுகளில் ஈடுபட வேண்டும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்கள் சுபீட்சமான வாழ்வுக்குத் திரும்ப வீடுகள், ஆலயங்கள், மற்றும் பொது நிறுவனங்களில் பிரார்த்தனை நடத்துமாறு அவர் கேட்டுள்ளார். (ஐ-9)

# பயணிகளைச் சோதனையிடுவது அடிப்படை உரிமை மீறலா?

### மனித உரிமை ஆணைக்குழு விசாரிக்கும்

யாழ்ப்பாணம்,மே28

முகமாலைச் சோதனைச் சாவடியில் பயணிகளைச் சோதனையிடுவது அடிப்படை மனித உரிமைகளை மீறுகின்ற செயல் எனச் சட்டத்தரணி ஒருவர் முறைப்பாடு செய்ததை அடுத்து அச்சோதனைச் சாவடியில் பணியாற்றிய படையினரை விசாரணைக்கு சமுகம் அளிக்கும்படி அழைப்பு விடுக்கபட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த சட்டத்தரணி நடராஜா காண்டீபன் என்பவர் தான் கடந்த 23 ஆம் திகதி ஏ-9 பாதை ஊடாக யாழ்ப்பாணம் வரும் போது முகமாலைச் சோதனைச் சாவடியில் வைத்து படையினர் தனது பயணப் பையை பரிசோதித்தனர் என்றும் -

இராணுவத்தினரின் இந்த நடவடிக்கையானது இலங்கை அரசமைப்பால் உத்தரவாதப்படுத்தப்பட்ட அடிப்படை மனித உரிமையை மீறும் செயலாகும் எனவும் - மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார்.

இதனை அடுத்தே இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அன்றைய தினம் சோதனைசாவடியில் கடமையில் இருந்த படையினரை எதிர்வரும் ஜூன் 5 ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நடைபெறும் விசாரணைக்குச் சமுகமளிக்குமாறு யாழ்.இணைப்பதிகாரி கடிதம் அனுப்பியுள்ளார். (ஐ-5)

# அரசியல், பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க பிரதமர் போராடி வருகிறார்

### இந்திய உற்பத்திப்பொருள் கண்காட்சியில் அமைச்சர் பீரிஸ் உரை

கொழும்பு,மே28

இலங்கை அரசு இன்று அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. அந்த நெருக்கடிக்குத் தீர்வுகாண பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பல வழிகளிலும் போராடி வருகிறார். தற்பொழுது நடந்து வரும் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா உதவ வேண்டும்.

நேற்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமான இந்திய உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியின் போது உரையாற்றிய அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் பீரிஸ், பிரதமர் ரணில் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் காரணமாகவே இந்திய உற்பத்திப் பொருள்கள் கண்காட்சி நடைபெறுகிறது. அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது இந்தியா உடனடியாக இலங்கையின உதவிக்கு விரைந்தது. இந்த மனிதாபிமான போக்கு பாராட்டப்பட வேண்டியதாகும் என்றார்.

இந்தியத் தூதுவர் நிருபம் சென் உரையாற்றுகையில் கூறியதாவது:-

இலங்கையில் சமாதானப் பேச்சுகள் ஆரம்பித்த பின்னர் வெளிநாட்டு கம்பனிகள் முதலீடுகள் செய்வதற்கு பெரும் ஆர்வம் காட்டிவருகின்றன. இது முன்னேற்றப் போக்கையே காட்டுகிறது. இந்தியா பல வழிகளிலும் இலங்கைக்கு உதவும். இன்று இந்திய நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்கள் இலங்கையில் கண்காட்சியில் இடம்பெறுவது மகிழ்ச்சிக்குரியது.

இலங்கையில் உள்ள நிறுவனங்களுடன் கூட்டு அடிப்படையில் உற்பத்திகளை மேற்கொள்ள இந்தியா விரும்புகிறது.

இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள் கவலையளிக்கின்றன. பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீள்கட்டமைப்புக்கு தன்னால் இயன்ற உதவிகளை இந்தியா மேற்கொள்ளும்.

- இவ்வாறு அவர் கூறினார்.

இலங்கை வர்த்தக சம்மேளனத் தலைவர் திலக் டி சில்வா, கைத்தொழில் அமைச்சர் ரோகித போகொல்லாகம, முதலீட்டுச் சபைத் தலைவர் அர்ஜூன் மகேந்திரன், புனர்வாழ்வு மீள் கட்டமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். (ஐ-4)

# வடமத்திய மாகாண சபையின் நேற்றைய கூட்டத்தில் குழப்பம்!

### இழுபறிகளால் செங்கோல் கீழே விழுந்து முறிந்தது

கொழும்பு,மே28

வடமத்திய மாகாணசபையின் நேற்றைய கூட்டத்தில் அமளிதுமளி ஏற்பட்டது. இதனால், கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டது.

வடமத்திய மாகாணசபையின் காணி அபிவிருத்தி கட்டளை தொடர்பாக ஆளுநர் அனுப்பிய திருத்தம், ஒழுங்குப் பத்திரத்துக்கு முரணான வகையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை எதிர்க்கட்சி (ஐதேக) உறுப்பினர்கள் எதிர்த்தனர்.

இந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாது, சபை தவிசாளர் திருத்தம் தொடர்பாக வாக்கெடுப்பை நடத்தவும் முன்வந்தார்.

வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது பார்வையாளர் கலரியிலிருந்தோர் கரகோஷம் செய்தனர். இதனையடுத்து கூச்சல் எழுப்பிய எதிர்க்கட்சியினர் சபை நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தினர்.

பின்னர் அவர்கள் சபையின் மத்திக்குச் சென்று செங்கோலைத் தூக்க முயன்றனர். இதனைத் தடுக்க அதிகாரிகள் முற்பட்டனர்.

இந்த இழுபறியில் செங்கோல் கீழே விழுந்து மூன்று துண்டுகளாக உடைந்தது எனக் கூறப்பட்டது.

செங்கோலை எதிர்க்கட்சியினர் கைப்பற்றுவதைத் தடுக்க முற்பட்ட ஓர் அதிகாரி காயமடைந்தார் எனவும தெரிகிறது.

இச்சம்பவத்தை அடுத்து, சபை தவிசாளர் சபையை ஒத்திவைத்து விட்டு வெளியேறினார். சபை நிகழ்சிகள் சுமார் 12 நிமிடங்கள் மட்டுமே நடைபெற்றன. (ஐ-6)

## பெண் சாரணிய வழிகாட்டுநருக்கு!

யாழ்ப்பாணம்,மே28

பெண்சாரணிய வழிகாட்டுநர் ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளதாக யாழ் மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார்.

### சுமார் பத்து ஆண்டுகளுக்குப் பின்

# ஒட்டகப்புலம் ஆலயத்தில் திருநாள் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம்,மே28

சுமார் 10 வருடங்களுக்குப் பின்னர் பலாலி ஒட்டகப்புலம் புனித அமலோற்பவ அன்னையின் திருநாட் கொண்டாட்டம் இம்முறை மிகவும் கோலாகலமாக இடம்பெறவுள்ளது.

விழாவுக்கான முன்னேற்பாடாக இன்றுமுதல் மூன்று நாள்களுக்கு ஆலய வளாகத்தில் சிரமதானப் பணிகள் இடம்பெறவுள்ளன.

திருநாட் திருப்பலி எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 10 மணிக்கு முன்னாள் யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜே..பி.ஈ.செல்வராசா அடிகளார் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. திருப்பலியின நிறைவில் பங்குமக்களால் மதிய உணவு விருந்தும் வழங்கப்படவுள்ளது.

திருப்பலியில் கலந்துகொள்ளும் மக்களுக்காக விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்படவுள்ளன.

பலாலி அதிஉயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய பகுதியில் இந்த ஆலயம் அமைந்திருக்கிறது.(ஐ-9)

# புத்தூரில் படைமுகாம் எதிர்த்து நாளை மறியல்

யாழ்ப்பாணம்,மே28

புத்தூர் நவக்கிரிப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்க எடுக்கப்படும் முயற்சியை நிறுத்துமாறு கோரி நாளை அப்பகுதியில் மறியற்போராட்டம் ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வலி.கிழக்கு பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

அங்கு முகாம் நிறுவப்பட்டால் அந்தப் பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்படும் என்றும -

சூழவுள்ள குடியிருப்புகளில் உள்ள மக்கள் பெரும்பாதிப்பை எதிர்நோக்குவர் என்றும் - பொது அமைப்புகள் தெரிவித்துள்ளன. (ஐ-3-11)

## உதைபந்தாட்ட நடுவர் தாக்கப்பட்டார்!

யாழ்ப்பாணம்,மே28

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று மாலை யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்திய உதைபந்தாட்ட போட்டி ஒன்றின் போது அந்தப் போட்டியின் நடுவர் ஒருவர் தாக்குதலுக்கு இலக்கானார் என்று கூறப்படுகிறது.

யூட்குமார் என்ற அந்த நடுவர் மயக்கமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். (ஐ-3)

# படையினரின் பாவனையில் உள்ள கட்டடங்களின் விவரம் சேகரிப்பு

### மன்னாரில் ஏற்பாடு

மன்னார்,மே28

மன்னாரில் படையினரின் பாவனையிலுள்ள அரச மற்றும் தனியார் கட்டடங்கள் தொடர்பான முழுமையான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், படை அதிகாரிகள் மற்றும் கணகாணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து இந்த விவரங்களைத திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தலைமன்னார்முதல் பள்ளிமுனை வரை சென்ற இக்குழுவினர் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள இடங்களைப பார்வையிட்டனர். இதனையடுத்து மன்னார் மாவட்ட அரச செயலகத்தில பொதுக்கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

படையினரின் பயன்பாட்டிலுள்ள பொதுமக்களின் காணிகள், கட்டடங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது சம்பந்தமாக இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. (ஐ-4)

## கடத்தப்பட்ட மாணவன் பற்றி தகவல் இல்லை

கரவெட்டி,மே28

பொலிகண்டி பகுதியில் வைத்து கடந்த சனிக்கிழமை வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டார் என்று கூறப்படும் யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா மாணவன் சிவபாலசிங்கம் சரவணன் (வயது 21) என்பவர் பற்றி இதுவரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கடத்தப்பட்ட மாணவனின் தந்தையார் திடீர் சுகவீனம் காரணமாக நேற்று வல்வை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இந்த இளைஞர் விடுவிக்கப்பட்டு விட்டதாக அவரது உறவினர்கள் தெரிவித்ததாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகம் [illegible] றிய செய்தி 6ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ளது. (ஐ-70)

# 12 பேர் கொண்ட கொள்ளையரை ஆயுதங்களுடன் பொலீஸார் கைது!

எல்பிட்டிய பிரதேசத்தில் கொள்ளைகள், திருட்டுக்கள் ஆகியவற்றில் ஈடுபட்டு வந்த 12 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று எல்பிட்டிய குற்றத் தடுப்புப் பிரிவு பொலீஸாரால் கைது செய்யப்பட்டது.

அக்கோஷ்டியிடமிருந்து பல ஆயுதங்களும் சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான கொள்ளையிடப்பட்ட பொருள்களும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன.

ரி-56 ரக தோட்டாக்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு கைத் துப்பாக்கி, ஆறு வாள்கள், ரி-56 ரக துப்பாக்கி போன்ற போலித் துப்பாக்கிகள் என்பன இக்கொள்ளைக் கோஷ்டியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில அடங்கும் என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள், தங்க நகைகள், ஆறு சைக்கிள்கள், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் என்பன கைப்பற்றப்பட்ட பொருள்களில் அடங்கும்.

எல்பிட்டிய, உரகஸ் மங்ஹந்திய, பிட்டிகல, பெந்தர ஆகிய பகுதிகளில் இவர்கள் கொள்ளையிட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை [illegible]டிய பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வெள்ள நிவாரணம் கிடைக்கவில்லையா? நிவாரணக் குழுவுக்கு அறிவியுங்கள்

### தோ.தொழிலாளர் குறித்து அமைச்சர் கரு கோரிக்கை

வெள்ளம், மண்சரிவு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை என்றால் உடனடியாக தமது அமைச்சில் இயங்கும் நிவாரணக் குழுவுக்கு அறிவிக்கும்படி அமைச்சர் கரு ஜயசூரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெள்ளம், மண்சரிவு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

வெள்ளம், மண்சரிவுகளால் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுவது குறித்து கேட்டபோதே அமைச்சர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

இதேவேளை, காவத்தை அவுப்பை தோட்டம், இறக்குவானை, பொல்வத்த, டெல்வின் ஆகிய இடங்களில் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு இதுவரை நிவாரணம் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க படையினர் இருவர் ஈராக்கில் சுட்டுக் கொலை!

பக்தாத்,மே28

துப்பாக்கிதாரி ஒருவரின் சூட்டுக்கு இலக்காகி பக்தாத்தில் இரண்டு அமெரிக்கப் படையினர் உயிரிழந்துள்ளனர். மேலும் நான்கு பேர் காயமடைந்தனர்.


கடந்த திங்கட்கிழமை இரவு இச்சம்பவம் நடந்ததாக பக்தாத்திலுள்ள அமெரிக்கப்படையின் பேச்சாளர் தெரிவித்தார்.

பக்தாத்திற்கு 120 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஹடிதா நகரில் இச்சம்பவம் நடந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து பக்தாத்திலுள்ள அமெரிக்க மத்திய கொமாண்டோ அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

அதிகாலை 6.15 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது. இதில் 3ஆவது பீரங்கி காவல் படையணியைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர்.

அதிகாலை வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த எமது படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த மேலதிக படையினர் துப்பாக்கிதாரியைத் தேடி வருகின்றனர். அவர்களுக்கு உதவியாக ஹெலிகொப்டர்களும் தேடுதலை நடத்துகின்றன. இயந்திரத் துப்பாக்கியில் ரொக்கட் குண்டுகளைப் பொருத்தி தீவிரமான தாக்குதலை சதாமின் ஆதரவாளி நடத்தியுள்ளார் என்று அவர் கூறினார்.



இச்சம்பவத்தில் காயமடைந்த படைவீரர் ஒருவர் இது குறித்துக் கூறுகையில், 'இது ஒரு விபத்து. திடீரென கண்முன்னே தோன்றிய துப்பாக்கிதாரி சரமாரியாக சுட்டார்' - என்றார்.

சதாம் ஹுசைனின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான தாக்குதல்கள் படிப்படியாக அதிகரித்து வருகின்றன. மறைந்திருந்த சதாமின் ஆதரவுப் படையினர் அமெரிக்கப் படையினரை வழிமறித்துத் தாக்கும் திட்டம் ஒன்றிற்கு முயற்சித்து வருவதாக தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் -

இதனால், கிராமப்புறங்களில் தேடுதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவுள்ளதாகவும் -

பக்தாத்திலுள்ள அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஒ)



ஆப்கானில் இப்போது சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டுவரும் அமெரிக்க இராணுவத்தினர் ஆப்கானியர்களின் 4 பேரைச் சுட்டுக்கொன்றுவிட்டனர். இதைக் கண்டித்து காபூல் நகரில் அமெரிக்க தூதர் அலுவலகம் முன் ஆப்கானிஸ்தான் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்திவருகின்றனர். அமெரிக்கத் தூதரின் காரை வழிமறித்து 'அமெரிக்க இராணுவமே திரும்பிப் போ' என்று ஆப்கானியர் ஒருவர் கோஷம் போட்ட காட்சி இது.

# இந்தோனேசியா, ஜப்பானில் நேற்று பூமியதிர்ச்சிகள்

ஜகார்த்தா,மே28

இந்தோனேசியாவில் நேற்று ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் ஒருவர் உயிரிழந்தார். பலர் காயமடைந்தனர். பல கட்டடங்கள் சேதமடைந்தன. நேற்றுக் காலை ஏற்பட்ட இந்த பூமியதிர்ச்சி 6.4ரிச்டர் அளவுக்குப் பதிவாகியிருந்தது. அங்கு தொடர்ந்து நில அதிர்வுகள் ஏற்படுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஜப்பானில் நேற்று 7ரிச்டர் அளவில் பூமியதிர்ச்சி ஏற்பட்டது. இதில் எவரும் உயிரிழக்கவில்லை. எனினும், 28 பேருக்கு காயம் ஏற்பட்டது. பூமியதிர்ச்சியைத் தொடர்ந்து அங்கு 90முறை நில அதிர்வு ஏற்பட்டதால் மக்கள் வெட்டவெளிகளில் தங்கி வருகின்றனர். கட்டடங்களிலுள்ள பெறுமதிமிக்க சொத்துக்களையும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றி வருகின்றனர்.

(ஒ)

# ராஜீவ் கொலை விசாரணை அமைப்பின் பதவிக்காலம் நீடிப்பு

புதுடில்லி,மே28

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை பின்னணி சதி குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட பன்முக ஒழுங்குமுறை கண்காணிப்பு அமைப்பின் பதவிக் காலத்தை நீடிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

ஜெயின் கமிஷனின் பரிந்துரைப்படி இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. மத்திய புலனாய்வுத்துறை இந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பை வகித்துவருகிறது. இந்த அமைப்பின் பதவிக்காலம் இந்த மாதத்துடன் முடிவடைகிறது. எனவே பதவிக் காலத்தை மேலும் ஓராண்டுக்கு நீடிக்குமாறு மத்திய அரசை, இந்த அமைப்பினர் கேட்டுக்கொண்டனர். இந்த வேண்டுகோளை கொள்கையளவில் ஏற்க இந்திய மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ)

# நிலக்கரிச் சுரங்க வெடி விபத்தில் சீனாவில் 30பேர் கருகி மாண்டனர்!

பெய்ஜிங்,மே28

சீனாவின் ஹினான் மாகாணத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கம் ஒன்றுக்குள் வெள்ளம் புகுந்ததையடுத்து அங்கிருந்த வாயுக் குழாய்கள் வெடித்துச் சிதறின. இதனால் அந்தச் சுரங்கத்தில் வேலை செய்துகொண்டிருந்த 30 பணியாளர்கள் உடல் கருகி பரிதாபமாக இறந்தனர். மேலும் 10 பேரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

காணாமல்போனவர்களும் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

உலக அரங்கில்

சுரங்கத்தினுள் ஏற்பட்ட தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. அங்கு மீட்பு நடவடிக்கைகள் நடைபெற்றுவருகின்றன. இதுவரை 25 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் மட்டும் சீனாவில் நிலக்கரிச் சுரங்க விபத்தில் சிக்கி ஏழாயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரவு, பகலாக மீட்புப் பணிகள் நடைபெறுவதாகவும், காணாமல் போனோரை தேடும் பணியில் நூற்றுக்கணக்கானோர் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் சீனாவில் நடந்த சுரங்க விபத்தில் எழுபத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சீனாவில் சுரங்க விபத்து நடப்பது தொடர்கதையாக மாறியுள்ளது. பாதுகாப்பற்ற முறையில், அரச அனுமதி இல்லாமல் அங்கு தனியாருக்குச் சொந்தமான நிலக்கரிச் சுரங்கங்கள் பல உள்ளன.

இந்த நிலக்கரிச் சுரங்கங்களை தடை செய்யும்படி பல தொண்டு அமைப்புகள் கோரிக்கை விடுத்தும் இவ்விடயத்தில் அரசு பாராமுகமாக இருப்பது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(ஒ)

# வெளவால், குரங்கு, பாம்புக்கு சார்ஸ் நோய்க் கிருமி தொற்று!

வனவிலங்குகளுக்கு 'சார்ஸ்' நோய்க் கிருமிகள் தொற்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதால், வன விலங்குகளின் இறைச்சி விற்பனை மற்றும் அதனைச் சாப்பிடுவதற்கு சீன அரசு தடைவிதித்துள்ளது.

வெளவால், குரங்கு, பாம்பு உள்ளிட்ட வன விலங்குகளை 'சார்ஸ்' கிருமிகள் தொற்றியிருப்பதை வேளாண் துறையைச் சேர்ந்த நிபுணர்கள் உறுதி செய்தனர்.

சீனாவில் குறிப்பாக தென்மாகாணமான கொங்டாக்கில் வன விலங்கு இறைச்சியை மக்கள் பிரதான உணவாக உண்ணுகின்றனர். ஆனால், சில நாள்களாக மேற்கொண்ட ஆய்வில் வன விலங்குகளுக்கு 'சார்ஸ்' கிருமிகள் தொற்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அதன் விற்பனைக்கும் அதனைச் சாப்பிடுவதற்கும் தடைவிதித்து கடுமையான நடவடிக்கைகளை சீனா எடுத்துள்ளது.

அந்த இறைச்சிகள் சாப்பிடுவதைத் தவிர்க்குமாறு மக்களிடம் பிரசாரம் செய்யப்பட்டுவருகின்றது.

இதையும் மீறி அந்த இறைச்சியை விற்பனை செய்தாலோ அல்லது சாப்பிட்டாலோ அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்.

புனுகுப் பூனை உள்ளிட்ட வன விலங்குகள் விற்பனை செய்யப்படுவதைத் தடுக்கும் முழு முயற்சியில் சீன அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஹொங்கொங்கில் நடத்தப்பட்ட ஆய்வில் புனுகுப்பூனைகள் 'சார்ஸ்' நோய் பாதிப்புக்குள்ளாகி இருப்பது தெரியவந்துள்ளது.

(ஒ)

# வயது முதிர்ச்சி அடைந்தால் நினைவாற்றல் குறைவது ஏன்?

வயது முதிர்ச்சி அடைந்தால் நினைவாற்றல் குறைவது ஏன்? என்பதற்கு அமெரிக்க விஞ்ஞானிகள் விளக்கம் கூறியுள்ளனர்.

வயதாகும்போது மூளையில் ஏற்படும் முடிச்சுக்கள்தான் ஞாபக மறதிக்கு காரணம் என்று அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த ஆராய்ச்சிக்காக இறந்துபோன எட்டுப் பேரின் மூளைகள் பயன்படுத்தப்பட்டன. அவர்களில் மூவர் நினைவாற்றல் குறைந்தவர்கள் ஏனைய ஐவரும் நல்ல நினைவாற்றல் உடையவர்கள்.

நினைவாற்றல் குறைந்தவர்களின் மூளைகளையும், நல்ல நினைவாற்றல் உள்ளவர்களின் மூளைகளையும் இரு பிரிவாகப் பிரித்து ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. ஆராய்ச்சிகளின் முடிவில் நினைவாற்றல் குறைந்தவர்களின் மூளைகளில் அதிக முடிச்சுக்கள் இருப்பது தெரியவந்தது. இதனால் நினைவாற்றல் குறைவதற்கு மூளையில் ஏற்படும் முடிச்சுக்களே காரணம் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

# அமெரிக்கா மீண்டும் தாக்கப்படலாம் புலனாய்வுத்துறையினர் எச்சரிக்கை!

தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதையடுத்து, அமெரிக்கா மீது மீண்டுமொருமுறை பயங்கரத் தாக்குதல் ஒன்று நடத்தப்படலாம் என்று அந்நாட்டு புலனாய்வுத் துறை அச்சம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க உள்துறை புலனாய்வு அமைப்புகளுக்கு கிடைத்த ஆவணங்களிலிருந்து இத்தகவல் கிடைத்துள்ளதாக 'நியூஸ் வீக்' பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அபுதாபியை' தலைமையகமாகக் கொண்டு செயற்படும் ஓர் இணையத்தளத்திலிருந்து இத்தகவல் கிடைக்கப்பெற்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

'ஜிஹாத்' என்ற அர்த்தத்தின் உண்மையான பொருள் என்ன என்பது உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் இந்த இணையத்தளத்தில் பதியப்பட்டுள்ளன.

'முஸ்லிம் சகோதரர்களே! நியூயோர்க், பாஸ்ரன் மற்றும் கடலோரப் பகுதியில் உள்ள இதர நகரங்களிலிருந்து வெளியேறிவிடுங்கள்' என்று அந்த இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து கருத்துத் தெரிவிதத அமெரிக்க புலனாய்வுத் துறை அதிகாரி 'நேரடியான எச்சரிக்கை எதுவும் [illegible] மக்களிடையே அச்சத்தை உருவாக்கும் நோக்கத்தில் இத்தகவல் வெளியிடப்பட்டிருக்கலாம்' - என்று கூறினார்.

# ஆஸ்துமாவைக் கட்டுப்படுத்த கடலில் வாழப் போகும் சிறுவன்

இத்தாலி,மே28

ஆஸ்துமா நோயைக் கட்டுப்படுத்த இத்தாலியைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் தனது வாழ்க்கையை சில காலம் கடலில் கழிக்கப்போகிறான்.

இதுகுறித்து தெரியவருவதாவது:-

இத்தாலியைச் சேர்ந்த 6வயது சிறுவன் நிகி, ஆஸ்துமா நோயினால் அவதிப்பட்டு வருகிறான். அவனுக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் நல்ல சுத்தமான காற்றை சுவாசித்து வாழ்ந்தால்தான் அவனது நோய் மட்டுப்படும் என்று கூறிவிட்டனர்.

சுத்தமான காற்றுக் கடலில்தான் கிடைக்கும் என்று மருத்துவர்கள் கூறியதையடுத்து, அச்சிறுவனும் அவனது பெற்றோர்களும் ஒரு படகில் தங்கள் வாழ்நாளை கழிக்க முடிவெடுத்திருக்கிறார்கள்.

# கார் சாரதியைக் கொன்றதாக செனகல் தூதர் மகன் கைது!

## இந்தியாவில் சம்பவம்

புதுடில்லி,மே28

இந்தியாவுக்கான செனகல் நாட்டுத் தூதரின் மகன் தனது கார் சாரதியைத் கொன்றுவிட்டதாக பொலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

தூதரின் மகன் மன்சூர் அலி தாஜமஹால் ஹோட்டலில் ஒரு விருந்து நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காகக் காரில் சென்றார். அவருடைய கார் சாரதியான திலாவர் (வயது - 32) காரைச் செலுத்தி வந்தார்.

நிகழ்ச்சி முடிந்து வெளியே வந்து பார்த்தபோது கார்ச் சாரதி மது போதையில் இருந்தார். இதனால் இருவருக்கும் இடையே வாய்த் தகராறு ஏற்பட்டது. ஆத்திரம் அடைந்த அலி சாரதியைப் பிடித்துத் தள்ளிவிட்டு காரை தானே ஓட்டிக்கொண்டு சென்றுவிட்டார்.

கீழே விழுந்த சாரதி தலையில் பலமாகக் காயம் ஏற்பட்டு இறந்துள்ளார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.


அலி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும் அவர் கைது செய்யப்படவில்லை. தூதர்களுக்கென உள்ள சில சட்டப் பாதுகாப்பு நடைமுறைகளே இதற்குக் காரணம்.

(ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 10 - 04 - 1935



மறைவு 08 - 06 - 2002

### அமரர் ஆறுமுகம் சிவகுரு

ஆண்டு ஒன்றும் ஆயிற்றோ அந்தோ நீர் மறைந்து
ஈண்டு உம்மை நினைந்தே இப்பூவுலகில் நாம் வாழ்கின்றோம்
ஐயா! நீர் மறைந்தாலும் நினைவுகள் மாறாது ஐயா!
உங்கள் அன்பான முகம் உள்ளத்தில் நிழலாடுகின்றதே!
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*


இன்று (28.05.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஓராண்டு நினைவுப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

15/7, பிரப்பங்குளம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.

(18453)

## நீங்காத நினைவில் 9ஆம் ஆண்டு



### அமரர் நடராசா கனகேஸ்வரன்

(இளைப்பாறிய அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

தோற்றம் 18.12.1929

மறைவு 28.05.1994

மனைவி: சரஸ்வதி கனகேஸ்வரன்

மல்லாகம். (18455)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 - 02 - 1943



உதிர்வு 08 - 06 - 2002

### திருமதி நாகரத்தினம் குலசேகரம்

(குகன் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்)

திதி: 28.05.2003

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் வதிவிடமாய்
நட்பின் இலக்கணமாய் வாழ்ந்த எம் ஆருயிர் அம்மாவே!
இல்லற வாழ்வை இனிதே வாழ்ந்து
அருமை முத்துக்களை ஈன்றெடுத்து
பார்போற்றும் உத்தமர்களாய் வளர்த்து
தெய்வமாகத் திகழும் அம்மாவே!
மலர்ந்த முகத்துடன் விருந்தினரை உபசரித்து
வந்த மருமக்களை தனது பிள்ளைகளாகவே மதித்து
வாழ்ந்த பெருமையுடைய அம்மாவே!
இயற்கையின் கொடுமை உங்களை எம்மிடமிருந்து
பிரித்து ஓராண்டு ஆனாலென்ன
நூற்றாண்டுகள் ஆனாலுமென்ன அம்மா
உங்கள் இனிய முகத்தின் அழகும்
இனிமையான பேச்சும் அன்பான அரவணைப்பும்
எங்கள் உயிர் உள்ளளவும் எமது மனங்களில்
நீங்காத நினைவுகளாக என்றும்
இருந்த வண்ணம் உள்ளதம்மா!

அன்பே வடிவான எமது அன்னையின் பிரிவுத்துயரால் வாடும்:
கொழும்பில் வசிக்கும் பாசமுள்ள கணவர்: குலசேகரம்
கனடாவில் வசிக்கும் மகன்கள், மகள்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், லண்டனில் வசிக்கும் மகன்,
கொழும்பில் வசிக்கும் மகள்கள், மகன்.

தகவல்: கணவர், பிள்ளைகள் (கொழும்பு)
39/7-2A.Darmalankara Road, Dehiwala

(18446)

## இரு விபத்துக்களில் இருவர் காயம்

யாழ்ப்பாணம்,மே28

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரு வேறு விபத்துச் சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்தனர்.

தெல்லிப்பழைப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற இராணுவ டிரக் மற்றும் சைக்கிள் விபத்தில் கோண்டாவில் தெற்கைச் சேர்ந்த கந்தசாமி வைரமுத்து (வயது 69) என்ற வயோதிபரும்,

நெல்லியடிப் பகுதியில் இடம் பெற்ற வான் - மோட்டார் சைக்கிள் விபத்தில் புத்தூர் மேற்கைச் சேர்ந்த மு.மாணிக்கம் (வயது 45) என்பவருமே காயமடைந்தனர். படுகாயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-5)

## கட்டாக்காலி நாய்கள் இன்று அழிப்பு

யாழ்ப்பாணம்,மே28

திருநெல்வேலிச் சந்தை, யாழ். பல்கலைக்கழக வளாகம், பணிக்கர் வளவு ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் இன்று பிடித்து அழிக்கப்படவுள்ளன.

எனவே, வளர்ப்பு நாய்களை கட்டி வைக்குமாறும், வளர்ப்பு நாய்களுக்கான உரிமத் தகட்டினை நல்லூர் உப அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது. (ஒ-ரி)

## யாழ்.நகரில் நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம்,மே28

யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கான தினங்கள் மற்றும் இடங்களை அறிவித்துள்ளது.

அந்த விவரங்கள் வருமாறு:

இன்று புதன்கிழமை காலை 8.30 மணி முதல் 12.30 மணிவரை நாவலர் வீதி மிருக வைத்திய நிலையத்திலும், பிற்பகல் 2 மணிமுதல் மாலை 4.30 மணிவரை ஓ.எல்.ஆர். பாடசாலை முன்பாகவும், நாளை காலை 8.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரை வண்ணார்பண்ணை வேம்படி சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2 மணிமுதல் 4.30 மணி வரை திருநெல்வேலி பாலர் பாடசாலையிலும் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இத் தடுப்பூசி ஏற்றும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

## மினிபஸ் சாரதிகளுக்கு எச்சரிக்கை

தென்மராட்சி,மே28

அளவுக்கதிகமாகப் பயணிகளை ஏற்றும் மினிபஸ்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சாவகச்சேரி நீதிவான் க.அரியநாயகம் பொலீஸாரைப் பணித்தார்.

கடந்த 23ஆம் திகதி அதிகளவு பயணிகளை ஏற்றிவந்த மினி பஸ்ஸின சாரதிகள் மீது பொலீஸார் தொடுத்திருந்த வழக்குகளை விசாரித்த போது அவர் இவ்வாறு அறிவுறுத்தினார். வருமானத்திற்காக பொதுமக்களின் உயிரைப் பணயம் வைக்கும் செயலில் ஈடுபடக்கூடாதென அவர் சாரதிகளை எச்சரிக்கை செய்து அவர்களுக்கு அபராதம் விதித்தார். (ஓ-117)

## கசிப்பு உற்பத்தி குற்றச்சாட்டில் மூவர் கைது!

தென்மராட்சி,மே28

மட்டுவில் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மூவரை சாவகச்சேரி பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து கடந்த சனிக்கிழமை நள்ளிரவு ஒரு வீட்டை சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்திய பொலீஸார் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதாக அந்த மூவரையும் கைதுசெய்தனர். அத்துடன் கசிப்பு உற்பத்திச் சாதனங்களையும் கசிப்பையும் கைப்பற்றினர்.

பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜீ.ஜீ.விமல்சிறி தலைமையில் சார்ஜன்ட் [illegible] நோவில், கபில, விநாயகமூர்த்தி ஆகியோர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர். (ஒ-117)

## வெளிக்கள உத்தியோகத்தர் பதவி வெற்றிடம்

இலங்கையின் முதல்தர காப்புறுதிக் கம்பனியாகிய வ/கூட்டுறவு காப்புறுதிக் கம்பனியானது யாழ். மாவட்டத்தில் தன்னுடைய செயற்பாடுகளை மேலும் விஸ்தரிக்கும் முகமாக இரண்டாம் கட்டமாக வெளிக்கள உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யவுள்ளது.

★ இப்பதவி வெற்றிடங்களுக்கான அடிப்படைத் தகுதியாக கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் கணிதபாடம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

எனவே ஆற்றலும் தகுதியும் உடையோர் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

**வ/கூட்டுறவு காப்புறுதிக்கம்பனி
நல்லூர் ப.நோ.கூ.ச.வணிகக்கட்டடம்
திருநெல்வேலி.**

OR

**வ/கூட்டுறவு காப்புறுதிக்கம்பனி
தங்கஸ்தான் கட்டடம்,
பிரதான வீதி, நெல்லியடி.**

**விண்ணப்ப முடிவு திகதி: 04.06.2003**

விண்ணப்பித்தவர்கள் 07.06.2003 யாழ்ப்பாணத்திலும் 08.06.2003 நெல்லியடியிலும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும். நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்க வேண்டியவை.

- சுயவிவரக்கோவை
- கல்விச் சான்றிதழ்
- பாஸ்போட் அளவிலான 02 நிழல்படங்கள்
- கிராமசேவையாளர் நற்சான்றிதழ்
- சமாதான நீதிவான் நற்சான்றிதழ்

நேர்முகப் பரீட்சை வடமராட்சியை அண்டிய விண்ணப்பதாரிகளுக்கு நெல்லியடியிலும், யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதியிலுள்ளவர்களுக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலும் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம். (நேரம் - 9.30 a.m.)

வ/கூட்டுறவு காப்புறுதிக்கம்பனி
*"எம்கடன் பணிசெய்து கிடப்பதே"*

(18454)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தாயின் மடியில் 15 - 10 - 1989



மண்ணின் மடியில் 14 - '04 - 2003

### ஆறுமுகராசா சுஜேந்தன்

(தரம் 9A மாணவன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)

எமது மகனின் திடீர் மறைவின்போது பல்வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் எமது துயரில் பங்குகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (28.05.2003) புதன்கிழமை நடைபெறும் 45ஆம் நாள் நினைவு நிகழ்வுகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**செ.ஆறுமுகராசா (தந்தை)**
(மலேரியா தடைஇயக்க தெளிகருவி இயக்குநர், முல்லைத்தீவு)

தற்காலிக முகவரி:
**சங்கம் வீதி, சாவகச்சேரி.**
நிரந்தர முகவரி:
**அறுகுவெளி, தனங்களப்பு**

(சி-28079)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## டோக்கியோ மாநாடு - ஒரு பொறி

உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டுக்கு இன்னும் பன்னிரண்டு நாள்களே உள்ளன.

இந்த மாநாட்டில் புலிகள் பங்குபற்றுவார்களா என்பது இன்னமும் தெளிவில்லாத நிலையிலேயே இருக்கின்றது.

இந்த மாநாட்டில் எப்படியும் புலிகளைப் பங்குபற்றச் செய்துவிடவேண்டும் என்பதில் பல சர்வதேச சக்திகள் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றன.

விடுதலைப் புலிகளை 'பயங்கரவாத இயக்கம்' என அறிவித்து - அவர்களைத் 'தீண்டத் தகாத சக்திகளாக' காட்டிக் கொண்ட பல நாடுகள் கூட, இந்த மாநாட்டில் புலிகளைப் பங்குபற்ற வைக்கும் - புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் - முயற்சியில் தீவிரமாக இருப்பதுதான் ஆச்சரியமானது.

சோழியன் குடுமி சும்மா ஆடாது. இந்த நாடுகள் பலவும் புலிகளை இந்த மாநாட்டுக்குக் கூட்டிவந்து சேர்க்கும் முயற்சியில் தலைகீழாக நிற்பதற்குக் காரணங்கள் உள்ளன.

அந்தக் காரணங்களை புலிகளின் தலைமை புரிந்துகொண்டிருப்பதால்தான் - 'உள்வீட்டுத் தகவல்கள்' மூலம் உறுதி செய்துகொண்டிருப்பதால்தான் - இந்த விடயத்தை மிக எச்சரிக்கையாகவும், நிதானத்துடனும் அது அணுகுகிறது.

டோக்கியோ மாநாடு போன்ற ஒரு சர்வதேச அரங்கில் - உலகின் முக்கிய நாடுகள், சர்வதேச அமைப்புகள் பங்குபற்றும் கூட்டத்தில் - புலிகளையும் கலந்துகொள்ளவைத்து, அங்கு இலங்கை விவகாரம் தொடர்பாக சர்வதேச நிலைப்பாடு இதுதான் என்று ஓர் அதிரடித் தீர்மானத்தை நிறைவேற்றி, அதை மீறி இனிவரும் காலத்தில் புலிகள் செயற்படமுடியாதவாறு ஒரு கட்டுப் போட திட்டங்கள் தீட்டப்பட்டிருப்பதாகத் தகவல்.

இந்தத் தீர்மானத்தில் -

அடிப்படை மனித உரிமைகள் எந்தவித மீறலுமின்றி பேணப்படவேண்டும்; ஜனநாயகவழிக்கு சகலரும் திரும்புவது உறுதி செய்யப்படவேண்டும்; அரசைத் தவிர ஏனைய அமைப்புகள் யாவும் ஆயுதங்களைக் களைவதாக அறிவிக்கவேண்டும்; வன்முறை வழிகளை இனி எக்காலத்திலும் நாடுவதில்லை என்று பிரகடனப்படுத்த வேண்டும்; சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்குரிய வழிகாட்டு வரைபடத்தை (Road Map) ஏற்பதாக ஒப்புக்கொள்ள வேண்டும் - போன்ற அம்சங்கள் அடங்கியிருக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புலிகளின் உயர்மட்டப் பிரதிநிதிகளையும் அந்த மாநாட்டுக்குக் கூட்டிக்கொண்டு போய் வைத்துக்கொண்டு, சர்வதேச சமூகத்தின் ஏகமனதான நிலைப்பாடு இதுதான் என அறிவித்து, புலிகளின் உத்தியோக பூர்வப் பதிலை - இந்தத் தீர்மானத்தை ஏற்கிறோம் என்ற உறுதியை - அங்கு வைத்தே பெற்றுக்கொள்வதற்கு அழுத்தம் கொடுப்பதும் -

சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு இதுதான் என்ற அழுத்தத்தைக் காட்டி எதிர்காலத்திலும் புலிகள் ஆயுத வழியை நாடாமல் அவர்களைக் கட்டிப்போடவைப்பதும் -

உத்தேச திட்டத்தின் நோக்கம் என்பது அரசல் புரசலாக வெளியே கசிந்திருக்கின்றது.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் - ஏன் நோர்வே உட்பட - பலதரப்புகளின் கூட்டுத்திட்டம் இது என்பதும், டோக்கியோ மாநாடு புலிகளுக்கு வைக்கப்பட்டுள்ள பொறி என்பதும் புலிகளுக்கு புரியாமல் இல்லை.

இந்தப் பொறியில் சிக்காமல் - ஈழத்தமிழர்களின் இரு தசாப்தகால விடுதலைப் போரின் உள்ளார்த்தத்தை சர்வதேச சமூகத்துக்குப் புரிய வைக்கும் முயற்சியாகவே - காய் நகர்த்தல்களை இப்போது மேற்கொண்டு வருகின்றார்கள் அவர்கள்.

ஆயுதங்களையோ, வன்முறைப் போராட்டங்களையோ நிரந்தரமாகக் கைவிடுகின்றோம் என்று தமிழர்கள் அறிவிப்பதோ -

ஐக்கிய இலங்கைக்குள் அமைதி வழியில் தீர்வு காண்பதை உறுப்படுத்துவதோ -

சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்கு வழி செய்யும் வழிகாட்டு வரைபடத்தின்மூலம் சமாதானத்தை எட்டுவதோ -

அனைத்தும் இலங்கை அரசுத் தரப்பில்தான் தங்கியிருக்கின்றன. புலிகளின் தரப்பிலோ (அல்லது தமிழர் தரப்பிலோ) அது தங்கியிருக்கவில்லை என்பதை இந்த சர்வதேச சமூகத்துக்குத் திட்டவட்டமாக வெளிப்படுத்தி அதனை அவர்களுக்குப் புரியவைப்பதே இன்றைய அவசர பணியாக உள்ளது. புலிகளின் தற்போதைய காய் நகர்த்தல்கள் அதனைத்தான் அவர்கள் கருதிச் செயற்படுகின்றார்கள் என்பதை தெளிவுபடுத்துகின்றன.

"தேர்தல் விஞ்ஞாபனத்தில் தான் வாக்குறுதி அளித்த இடைக்கால நிர்வாகத்தைக்கூட வழங்கமுடியாத அரசுகள்தான் இலங்கையில் உள்ளன. தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைத் தரமுடியாத - கையாலாகாத - இலங்கை அரசை நம்பித்தானா இந்த அழுத்தங்களைத் தமழர் தரப்பு மீது (புலிகள் மீது) பிரயோகிக்கத் தயாராகுகின்றீர்கள்? உண்மை நிலையைக் புரிந்துகொள்ளுங்கள்!" - இந்தச் செய்தியை சர்வதேச சமூகத்துக்கு தெளிவாகத் தெரியப்படுத்துவதே புலிகளின் இப்போதைய உத்தியின் நோக்கமாக உள்ளது.

டோக்கியோ மாநாடு என்ற பொறியில் காலை வைக்க முன்னர் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் புலிகள் சிந்திப்பதில் அர்த்தம் நிறைய உண்டு என்பதை தமிழர்களும், சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ள முன்வரவேண்டும்.

### சமாதானப் பேச்சிலிருந்து பின்வாங்கவே

# சாத்தியம் இல்லாத கோரிக்கையை விடுதலைப் புலிகள் முன்வைக்கின்றனர்!

## இப்படிக் கூறுகிறார் டக்ளஸ் தேவானந்தா

யதார்த்தத்துக்குப் புறம்பானதும் நடைமுறைக்குச் சாத்தியமில்லாததுமான ஒரு கோரிக்கையை முன்வைப்பதன் மூலம் புலிகள் சமாதானப் பேச்சுக்களின் நடைமுறையைக் குழப்பி, அதிலிருந்து பின்வாங்க விரும்புகின்றனர்.

- இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நோர்வே அரசு ஊடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அனுப்பிவைத்த கடிதம் மற்றும் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் நடத்திய செய்தியாளர் மாநாடு என்பவற்றின் மூலம் புலிகள் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் நிதி, நிர்வாக அதிகாரங்களை மேற்கொள்வதற்கான இடைக்கால நிர்வாகம் ஒன்றை கோரியுள்ளனர். நாட்டின் அமுலில் உள்ள அரசமைப்புக்கு அப்பாற்பட்ட வகையிலாயினும் இது நிறைவேற்றப்படும் என்ற உறுதிமொழி வழங்கப்படவேண்டும் என புலிகள் எதிர்பார்க்கின்றனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகளின் இக்கோரிக்கை யதார்த்தத்துக்குப் புறம்பானதும் நடைமுறைச் சாத்தியம் இல்லாததுமாகும். ஆறுசுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்று முடிந்த பின்னரும் சுமார் 14 மாதங்கள் பல்வேறு மட்டங்களில் கலந்துரையாடிய பின்னர், புலிகள் இப்போது இக்கோரிக்கையை முன்வைக்கின்றனர். வாஷிங்ரன் மாநாட்டுக்கு அழைக்கப்படவில்லை என்பதைக் காரணங்காட்டி பேச்சுக்களில் இருந்து ஒருதலைப்பட்சமாக விலகிய புலிகள், தமது செயற்பாட்டுக்கு நியாயம் தேடும் வகையில் பல புதுப் புதுக் காரணங்களை முன்வைத்து வருகின்றனர்.

தமிழ்பேசும் மக்களின் ஜனநாயக அரசியல் உரிமைகளுககு உத்தரவாதம் வழங்கவேண்டிய நிலை புலிகளுக்கு ஏற்பட்டபோது பாதுகாப்பு மற்றும் இயல்புநிலை உருவாக்குவதற்கான உப குழுவிலிருந்து புலிகள் ஒருதலைப்பட்சமாக விலகிக் கொண்டனர். கடந்த டிசெம்பர் 14இல் முகமாலையில் இடம் பெற்ற சந்திப்புக்குப் பின்னர் இந்த உபகுழுவைக் கூட்டுவ[illegible] மேற்கொள்ளப்பட்ட எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை.

[illegible]மலும், இப்போது இடைக்கால நிர்வாகத்தைக் கோரும் புலிகளும் அவர்களுக்கு வக்காலத்து வாங்கும் தமிழர் விடுதலை[illegible] கூட்டணியினரும் இடைக்கால நிர்வாக ஏற்பாடுகள் மேற்கொ[illegible]ளும் வகையில் நாம் முயற்சியெடுத்தபோது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் முயற்சிகளை தடம்புரளச் செய்யும் செயல் எனக்கூறிவந்தது இங்கு நினைவுகூரத்தக்கதாகும். குறிப்பாக, கூட்டணி செயலதிபர் இரா.சம்பந்தன் இதனைத் தெரிவித்து, வடக்கு - கிழக்கிற்கு நாம் ஏற்படுத்த முனைந்த இடைக்கால நிர்வாகத்துக்கு முட்டுக்கட்டைபோட்டு நின்றார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானபோது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் வரையிலான இடைக்காலத்தில் நிர்வாக நடவடிக்கையில் புலிகளுக்கு முதலிடம் வழங்க இணங்கப்பட்டிருந்தது. எனினும், அப்போது இடைக்கால நிர்வாகம் ஏற்படுவதை புலிகளின் செயற்பாடுகளே தடுத்தன. இப்போது அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் அத்தகைய அரசியல் தீர்வு குறித்த ஒப்பந்தம் எதுவும் இல்லை. அடிப்படை அரசியல் விடயங்கள் இன்னமும் பேசப்படவேயில்லை. இந்தநிலையில், இடைக்காலம் என்பது எது என்று எவ்வாறு வரையறை செய்யமுடியும்? எனவேதான் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு எப்படியானது என்பதை வரையறை செய்யப்படவேண்டும் என்பதும், அத்தகைய தீர்வு நடைமுறைக்கு வருவதற்கு முன்பான காலமே இடைக்காலமாகக் கருதப்படலாம் என்பதுமே எமது கருத்தாகும் - என்று டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

# மோட்டார் சைக்கிளிலில் பயணிக்கும் இருவரும் தலைக்கவசம் அணியவேண்டும்!

## போக்குவரத்து பொலீஸ் அதிகாரி வலியுறுத்து

யாழ்ப்பாணம்,மே28

மோட்டார் சைக்கிளைச் செலுத்துபவர் மட்டுமன்றி பின் இருக்கையில் அமர்ந்துள்ளவரும் கட்டாயமாக தலைக்கவசம் அணிதல்வேண்டும். தவறும் பட்சத்தில் இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு எச்சரித்துள்ளார் யாழ்.போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலீஸ் பொறுப்பதிகாரி எஸ்.சேனாரத்ன.

மோட்டார்சைக்கிளில் பயணம் செய்யும்போது அதில் பயணிக்கும் இருவரும் தலைக்கவசம் அணிந்து செல்லவேண்டுமென ஏற்கனவே பல தடவைகள் அறிவுறுத்தப்பட்டது. ஆனால், இன்றுவரை பெரும்பாலானவர்கள் அதனைக் கடைப்பிடிப்பதில்லை. மாறாக மோட்டார் சைக்கிளைச் செலுத்துபவர்கள் மட்டுமே தலைக்கவசம் அணிந்து செல்கின்றனர்.

இதனால், விபத்துக்கள் நடைபெறும்போது வீணான உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இதனைத் தடுக்கும் நோக்கத்துடனேயே இந்த இறுக்கமான நடைமுறை அமுல்படுத்தப்படுகிறது.

அதேவேளை, மோட்டார்சைக்கிளில் செல்லும்போது அதனைச் செலுத்துபவர் சாரதி அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் என்பவற்றை வைத்திருக்க வேண்டும். அத்துடன், மோட்டார் சைக்கிளின் முன்னும் பின்னும் தெளிவாக எழுதப்பட்ட இலக்கத்தகடுகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

பாடசாலைகளுக்கு சைக்கிளில் செல்லும் மாணவர்கள் ஒரு சைக்கிளில் இருவருக்குமேல் பயணம் செய்யக்கூடாது. அத்துடன், வீதியில் சமாந்தரமாகச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

இவற்றை மீறிச் செயற்படுவோர் மீது தீவிர சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ஒ-5)

# மிருசுவில் சந்திப் பகுதியில் கழிவுகளால் துர்நாற்றம்!

யாழ்ப்பாணம்,மே28

ஏ-9 வீதியில் மிருசுவில் சந்தியை அண்டிய பகுதிகளில் பெருமளவில் குப்பை கூளங்கள் மற்றம் கழிவுகள் குவிந்து கிடப்பதாகக் கூறப்படுகிறது. இதனால் அப்பகுதியில் கடும் துர்நாற்றம் எழுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முகமாலை சோதனைச்சாவடிக்குள் அனுமதிப்படுவதற்கு முன்னர் பாரஊர்திகள் மற்றும் பயணிகள் பஸ்கள் என்பன இவ்விடத்திலேயே நிறுத்திவைக்கப்படுகின்றன. அத்துடன் பொருள்களுடன் வரும் பார ஊர்திகளுக்கான பயண அனுமதிப்பத்திரங்களும், முதல்கட்ட வாகனப் பரிசோதனைகளும் இப்பகுதியில் வைத்தே மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் தினமும் இரவுவேளையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட வாகனங்கள் இப்பகுதியில் நிறுத்தி வைக்கப்படுகின்றன. காலையில மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆவை வந்த ஒழுங்கின பிரகாரம் முகமாலை சோதனைச் சாவடிக்குள் அனுமதிக்கப்படுகின்றன.

இதனால் இப்பகுதி ஏக காலத்தில் பெருமளவில் மக்கள் மற்றும் வாகனங்கள் கூடும் ஓர் இடமாக உள்ளது. இருந்தபோதிலும் இவ்விடத்தில் கழிப்பிட வசதிகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.அத்துடன் பயணிகளால் வீசப்படும் கழிவுகள் எதுவும் அன்றாடம் அகற்றப்படுவதற்கான எந்த ஒரு நடவடிக்கையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் இப்பகுதியில் குப்பை கூளங்கள் மற்றும் கழிவுகள் குவிந்து பெரும் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் பயணிகளும் மற்றும் இச்சூழலில் வசிக்கும் மக்களும் தொற்றுநோய்களுக்கு உள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (ஒ-15)

### நாளை

வைகாசி 15
வியாழக்கிழமை
29.05.2003
திதி : திரயோதசி
காலை 6.27
நட்சத்திரம் : பரணி
முன்னிரவு 9.01 வரை
அக்கிநாள் முடிவு
சுபநேரம் : 7.22- 8.52
இராகுகாலம் : 1.22- 2.52
[illegible]

### உதய வாக்கு

யோசனைகள் என்ற மூல தனத்தின் [illegible] தாம் கஷ்டத்தில் இருக்கும்போது கிடைக்கும்.

# நிவாரண அரிசியைப் பரிசோதிக்க சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,மே28

இலவச நிவாரணம் வழங்குவதற்காக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் கொள்வனவு செய்யப்படும் அரிசியின் தரத்தை சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் உறுதிப்படுத்துமாறு யாழ்.மாவட்ட செயலகத் திட்டப் பணிப்பாளர் சகல சுகாதார வைத்திய அதிகாரிகளையும் கேட்டுள்ளார். நிவாரணம் பெறுவோரின் நலன் கருதியே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

2003 மார்ச் மாதத்திலிருந்து நிவாரணத்திற்கான அரிசியை சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்து நுகர்வோருக்கு வழங்கலாமென்று தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்திற்கமைய மார்ச் மாத இலவச நிவாரணத்திற்காக சிவப்பு நாடு மற்றும் புழுங்கல் ரக அரிசிகளை கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கொள்வனவு செய்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அரிசியின் தரத்தில் யாதேனும் குறைபாடுகள் காணப்பட்டால் அதனை தனது கவனத்திற்கு கொண்டு வருமாறும் திட்டப்பணிப்பாளர் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கேட்டுள்ளார். (ஒ-76)

### சாவகச்சேரி ஆஸ்பத்திரியில்

# கட்டில்களுக்கு மெத்தையின்றி உள்நோயாளர்கள் சிரமம்!

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வார்டுகளில் உள்ள கட்டில்களுக்கு மெத்தைகள் இதுவரை இடப்படவில்லை. இதனால், நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கிவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, குழந்தைகள் பிரிவு, பிரசவ விடுதி ஆகியவற்றில் சுமார் நாற்பது கட்டில்கள் உள்ளன. இவற்றில் பிரசவ விடுதி, குழந்தைகள் பிரிவு ஆகியவற்றில் உள்ள கட்டில்களுக்கே மெத்தைகள் இடப்பட்டுள்ளன. ஏனைய பிரிவுகளில் உள்ள கட்டில்களில் பலகைகளே போடப்பட்டுள்ளன.

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வாாட்டுகள் இயங்கத்தொடங்கி நீண்டநாள்களாகின்றன. இந்த வார்ட்டுகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. ஆயினும் இதுவரை மெத்தைகள் வழங்கப்படாதது குறித்து நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராய்குளம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,மே28

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராய்குளத்தின் புனரமைப்பு வேலைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன.

நீண்ட காலத்தின் பின்னர் கிராய்குளம் புனரமைக்கப்படுவது அப்பகுதிக்கு பயனுள்ளதாக அமையும்.

இக்குளம் புனரமைப்பதன் மூலம் 100 விவசாயக் குடும்பங்களும் மற்றும் 300 ஏனைய குடும்பங்களும் பயன பெற வாய்ப்பேற்பட்டுள்ளது. (ஒ-ரி)

## கோப்பாயில் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

கோப்பாய்,மே28

கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாயக் குழுக் கூட்டமும் முறையே இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கும், 11.30 மணிக்கும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

எனவே, சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளை கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுக்கொள்கிறார். (ஒ-72)

## கடத்தப்பட்டவர் வீடு திரும்பினார்!

யாழ்ப்பாணம்,மே28

இருநாள்களுக்கு முன்னர் வடமராட்சி பொலிகண்டியில் வைத்து இனந்தெரியாதவர்களால் வெள்ளை வானில் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவன் சிவபாலசிங்கம் சரவணன் பாதுகாப்பாக வீடு திரும்பியுள்ளதாக அவரது பெற்றோரால் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திற்கு நேற்றுமுன்தினம் தெரிவிக்கப்பட்டது. (ம-ரி)

## சட்டவிரோத மின்பாவனை: 6 பேர் கைது!

கரவெட்டி,மே28

வல்வெட்டித்துறை பொலீஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த வாரம் சட்டவிரோத மின் பாவனையாளர்களை வடமராட்சி மின்சார சபை அத்தியட்சகர் த.செல்வச்சந்திரன் தலைமையிலான குழுவினர் வல்வெட்டித்துறைப் பொலீஸாரின் உதவியுடன் தேடிப் பிடித்தனர்.

கம்பர்மலை, உடுப்பிட்டி, பொலிகண்டி போன்ற இடங்களில் இடம் பெற்ற இந்த நடவடிக்கையின் போது சட்டவிரோத மின்சார பாவனைக்காக 6 பேர் பிடிபட்டனர். அவர்களிடமிருந்து மின் உபகரணப்பொருள்களும் மீட்கப்பட்டன. அவர்கள் பருத்தித்துறை .மாவட்ட நீதிவான் அ.பிறேம்சங்கர் முன்பு ஆஜர்படுத்தப்பட்டார்கள்.

அவர்கள் ஆறு பேரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து ஒவ்வொருவருக்கும் தண்டப் பணமாக ரூபா. 6 ஆயிரம் அறிவிடப்பட்டது. அத்துடன் சட்டவிரோமாக மின்சாரம் பெறக்கூடாது என்று எச்சரித்து விடுவிக்கப்பட்டனர். (ஒ-70)

## வைத்திய நிபுணர்களுக்கு 'பேஜர்'

யாழ்ப்பாணம்,மே28

யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களுக்கு தகவல் பரிமாற்றக் கருவியான 'பேஜர்' கொழும்பு 'மைற்றல்' நிறுவனத்தினால் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

வைத்திய நிபுணர்களுக்கு மாத்திரம் இக்கருவி வழங்கப்பட்டுள்ளது. இக்கருவியின் துணைகொண்டு அவசர செய்திப் பரிமாற்றத்தை மேற்கொள்ள வசதி ஏற்பட்டுள்ளது.

நிபுணர்கள் எங்கிருந்தாலும் வைத்தியசாலையில் இருந்து இந்த இலக்கத்துக்கு அழைப்புக் கொடுத்தால் நிபுணர்களிடம் இருக்கும் அக்கருவி ஒலி எழுப்பும் அந்த ஒலியினைக் கேட்டதும் வைத்தியர்கள் தொலைபேசியில் தொடர்புகொண்டு விடயத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

நோயாளர்களின் ஆபத்து வேளையில் நிபுணர்களை உடன் அழைப்பதற்கு வசதியாகவே இக்கருவிகள் பயன்படுத்தப்படவுள்ளன.

இதற்கு முன் அம்புலன்ஸ் அனுப்பியே வைத்திய நிபுணர்களை அவசர தேவைகளுக்காக அழைப்பது வழக்கம். (ஒ-15)

# நவாலி ஆலய தேரிலிருந்து 23 யாழிகள் திருட்டு

யாழ்ப்பாணம்,மே28

நவாலி அட்டகிரி முருகன் ஆலயத்தின் சித்திரத்தேரில் பொருத்தப்பட்டிருந்த 23 யாழிகள் கடந்த வாரம் திருட்டுப் போயுள்ளன.

தேர்க் கொட்டகையை பிரித்து உள் இறங்கிய திருடர்கள் இந்த திருட்டினை மேற்கொண்டுள்ளனர் என ஆலயத்தின் வழிபடுநர் சபைத் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாறு திருட்டுப்போன ஒவ்வொரு யாழிகளும் தலா 15ஆயிரம் ரூபா பெறுமதியானவை என்றும் - அவர் அறிவித்துள்ளார். (எ-185)



யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் பாலவிகாஷ் வகுப்புகளில் சிறுவர்களுக்கு ஒழுக்க, ஆன்மீக கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அண்மையில் நடைபெற்ற ஈஸ்வரம்மா தினவிழாவில் நாடகம், பேச்சு, மனித மேம்பாட்டு விளையாட்டுக்களில் பங்குபற்றி பரிசில்களை வென்ற பிள்ளைகளையும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம். (ஐ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எழுதுமட்டுவாழ் தெற்கு
கிராம உத்தியோகத்தர் (J/333)
உயர்திரு.
**பொன்னுத்துரை நவரத்தினராசா**

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவரது சேவை மேன் மேலும் தொடர எல்லாம் வல்ல பெரியகேணி சிவஞானப் பிள்ளையாரை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

எழுதுமட்டுவாழ் தெற்கு
பெரியகேணி சிவஞானப் பிள்ளையார் ஆலய
பரிபாலன சபையினர்.

(18444)



## கொழும்பு - சென்னை சிங்கப்பூரில் தங்குமிடவசதி

கொழும்பு - சென்னை - சிங்கப்பூரில் விடுமுறையைக் கழிக்க, திருமணப் பதிவுசெய்து, திருமணம் செய்ய வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு, தளபாட சாமான்களோடு சகல வசதிகளுடனான தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடுகளும் அவரவர் வசதிக்கு ஏற்பச்செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து இலவச வாகன வசதி. சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.

மேலதிக விவரங்களுக்கு:

**LINGAM WEDDING SERVICE**

10, Anson Road, # 15-14 International Plaza,
Singapore 079903

எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக
கைத்தொலைபேசி எண்:

**அப்பு - 0065-975 14 941**

(12204)


## முதலாம் ஆண்டு நினைவுநாள்

தோற்றம்
1977
-
12
-
21



மறைவு
2002
-
06
-
08

### செல்வி ஜெயவதனி கதிரன்

(விஜயா)

திதி : 28.05.2003

கண்ணில் தோன்றும் கவலை தீராதோ மகளே!
பாசத்தின் பிறப்பிடமே! பண்பின் சிகரமே விஜயாவே!
கண்கெட்ட காலனும் கவர்ந்தானோ உன்னுயிரை?
உன் வதனத்தில் சிரிப்பொலி ஓய்ந்துபோனதோ....?

*பிள்ளையார் கோயிலடி,*
*தொண்டமானாறு.*

(18477)

- குடும்பத்தினர்.


சிவமயம்

## வட-இந்திய காசி, பத்திரிநாத், கேதார்நாத், அமர்நாத் யாத்திரை

பூரி, புவனேஸ்வர், கோனராக், காசி, சாரணாத், கயா, புத்தகயா, கல்கத்தா, ஜெய்ப்பூர், அலகாபாத் (திருவேணி சங்கமம் கங்கா, ஜமுனா, சரஸ்வதி), அயோத்தி, மதுரா, ஹரித்துவார், ரிஷிகேஸ், பத்திரிநாத், கேதார்நாத், கங்கோத்திரி, ஜமுனோத்திரி, டெல்லி, ஆக்ரா (தாஸ்மஹால்), அமர்நாத், வைஷ்ணவிதேவி, சென்னை, இராமேஸ்வரம், திருச்செந்தூர், சுசீந்திரம், கன்னியாகுமரி, மதுரை, திருச்சி, சிதம்பரம், சென்னை. 35 நாள்கள். ஆண்கள் 75 வயதிற்குள், பெண்கள் 45 வயதிற்குமேல், 70 வயதிற்குள் ஆரோக்கியமானவர்கள் மட்டும்.

விருப்பமுடையவர்கள் தங்கள் பாஸ்போட் பிரதி 2, அடையாள அட்டை பிரதி 2, அத்துடன் ரூபா 1000/- முற்பணம் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளவும்.

இந்த யாத்திரைகள் 2000 ஆம் ஆண்டு காலமான என் மனைவியின் நினைவாக சேவைநலம் கொண்டு குறைந்த செலவில் நடத்தும் யாத்திரைகளாகும்.

மேலதிக விவரங்களுக்கு:

T. ஸ்ரீரெங்கநாதன் தொலைபேசி இல. 0777- 680102
(25பேர் மட்டுமே) (C-27668)


## வட இந்தியத் திருத்தல யாத்திரையின் விஷேசமான இரண்டு தலங்களின் வரலாற்றுச் சிறப்பும் அவற்றின் புனிதத் தன்மையும்

**கயா**

இந்த ஆலயம் காசியிலிருந்து சுமார் 225 கி.மீ. தூரத்திலுள்ளது. கயா என்பது பித்ருக்களை பூஜிப்பதற்காகவே ஏற்பட்ட புனித ஸ்தலமாகும். இங்குள்ள பல்குன்நதி மகத்தான புனிதத்தன்மை பெற்ற புண்ணிய நதியாகும். ஏன் இவ்வித புனிதத் தன்மை என்று பலருக்குத் தெரியாது. பூவுலகில் தெற்குத் திசையில் உள்ள பித்ரு உலகத்தையே கயா ஷேஸ்திரம் குறிப்பிடுகின்றது. பித்ரு உலகம் என்பது பற்றி புராதன நம்முடைய பண்டைய நூல்கள் விளக்குகின்றன. புண்ணிய நதிகளும் புனிதமான நீர்வீழ்ச்சிகளும் நிரம்பிய இவ்வுலகில் கயாவில் அமைதியான சுகம்தரும் நிழலையும் குளிர்ச்சியையும் அளிக்கக் கூடிய ஆலமரங்கள் நிறைய அனேகமுண்டு. இவ்வுலகில் உயிர் நீத்து தாங்கள் வாழ்நாள்களில் செய்துள்ள நற்பேறுகளின் நற்பலன்களை அனுபவிக்க புண்ணிய உலகிற்குச் செல்லும் பித்ருக்கள் இந்த பித்ரு உலகில் இங்குள்ள ஆலமரங்களின் நிழல்களில் தங்கி இளைப்பாறி மகிழ்ச்சியுடன் இருந்துவிட்டு அதன்பின்பே மற்ற புண்ணிய உலகங்களுக்கு தம் பயணங்களைத் தொடாகின்றனர். மேலும் நமது உறவினர்களுக்கு, தாய், தகப்பன், மாமன், மாமி, சகோதரன், சகோதரி, மனைவி, பிள்ளைகள் ஆகியோருக்கு ஆண்கள் பிதிர்க்கடன் செய்வது தவிர கணவருக்கும் மேற்குறிப்பிட்ட உறவினர்களுக்கு பெண்கள் அதாவது கணவருக்கு மனைவி பிதிர்க்கடன் செய்யும் ஒரேயொரு புண்ணிய தலம் கயா ஷேஸ்திரம் தான். மேலும் மேற்குறிப்பிட்ட குடும்ப உறுப்பினர்கள் இறந்த நேரம், மாதம், கிழமை, திகதி (திதி) தெரியாமல் இருந்தாலும் இந்த கயா ஷேஸ்திரம் சென்று அங்கிருக்கும் பண்டாக்கள் மூலம் கிரியைகளைச் சிறப்பாகச் செய்து அவர்கள் சொல்லித்தரும் மந்திரங்களையும், அவர்கள் தரும் தெற்பையையும் அணிந்து யாருக்குப் பிதிர்க்கடன் செய்யப் போகின்றோமோ அவரின் பெயரையும் உறவையும் சொல்லி அழைத்தால் எங்கிருந்தாலும் அந்த ஆத்மா அந்த இடத்திற்கு நமது அருகில் வருவார்கள். அதன்பின் பண்டாக்கள் செய்யவேண்டிய பூஜைகளைச் செய்து அட்சயவட்டம், பல்குன் நதி, விஷ்ணுபாதம் ஆகிய இடங்களில் 64 பிண்டங்கள் போட்டு பூஜையை முடிப்பார்கள். அத்துடன் நாம் விரும்பி உண்ணும் உணவில் ஓர் இலை வகை, ஒரு காய்வகை, ஒருபழவகை ஆகியவற்றை இன்று முதல் உண்பதில்லையென சங்கல்ப்பம் செய்து தெற்பையை அவிழ்த்துப் போட்டு சிரார்த்தம் செய்து முடிப்பார்கள். இந்தப் பிதிர்க்கடனை காசி, பத்ரி, கேதார், அலகாபாத் ஆகிய இடங்களிலும் செய்யலாம். ஆனால் கயாவில் செய்வதுதான் சிறப்பு. இப்படிச் செய்வதால் அவர்களுக்கு ஆத்ம சாந்தியும் மகிழ்ச்சியும் திருப்தியும் ஏற்படுகின்றது. பின்பு அவர்களது ஆசிகள் நம்மை திரும்ப வந்தடைகின்றன.

(சி-27670)

(அடுத்த வாரமும் தொடரும்)




உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766
(C-28103)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.சிறைச்சாலையின் முகப்பு

# சிறைக்கம்பிகளுக்குள் சென்று...

## ஓர் அரங்க ஆய்வு

**குடாநாட்டில் குற்றச் செயல்கள் பற்றி அதிகம் பேசப்படுகின்றதே தவிர குற்றமிழைப்பவர்கள் யார், அவர்களின் பின்னணி என்ன, என்பதை யாரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை.**

**யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் கைதிகளின் மறுபக்கத்தை ஆய்வுசெய்ய முயன்றிருக்கின்றனர்.**

**உளவியல் மற்றும் நுண்கலைப் பிரிவுகளைச் சேர்ந்த ப.கேதீஸ், க.தர்மசேகரம், சி.ஐங்கரன் ஆகிய மூவரும் கூட்டாக யாழ்.சிறைச்சாலைக்குள் சென்று அரங்க செயற்றிட்ட அடிப்படையில் நடத்திய ஆய்வின் பெறுபேறுகள் இங்கு கட்டுரை வடிவில் வெளியாகின்றன.**


ப.கேதீஸ், க.தர்மசேகரம், சி.ஐங்கரன்

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள்.


அண்மைக்காலமாக யாழ். பத்திரிகைகளில் குற்றச் செயல்கள் பற்றிய செய்திகளைத் தினசரி காணமுடிகிறது. இதனால், எமது சமூகம் வன்போக்குச் சமூகமாக மாறி வருகிறதா? என்ற அச்சம் பலரிடமும் எழுகிறது. இவ்வாறு குற்றச் செயல்கள் இடம் பெறுவதற்கான காரணங்கள் என்ன?

ஒருவன் எவ்வாறு குற்றவாளியாகின்றான்?

அல்லது ஆக்கப்படுகிறான்? இவ்வாறு ஆக்கப்படுவதில் சமூகத்தின் பங்கு என்ன?

குற்றவாளிகள் எனக் காணப்படுபவர்களின் எதிர்காலம் என்ன?

அவர்களை சமூகப் பயன்பாடுள்ள மனிதர்களாக மாற்றமுடியுமா? போன்ற வினாககளுக்கு விடை காணும் வகையில் அரங்க உத்திகளைக் கையாண்டு (TheatreTechniques) யாழ்.சிறைச்சாலையைக் களமாகக் கொண்டு, இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

தற்போது யாழ்.சிறைச்சாலையில் 150 - 200 வரையானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் தன் மகளையே வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட தந்தை, மனைவியைக் கொலை செய்ததான வழக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கணவன், பல களவுகளில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படுவோர், கசிப்பு, குழுமோதல்கள், குடும்பத் தகராறுகள், பணமோசடிகள், சட்டவிரோதமான திருமணங்கள், முறையற்ற கருத்தரிப்பு, சிசுக்கொலைகள் ஆகியவற்றின் பின்னணியில் கைதானோர் அடங்குகின்றனர்.

இவ்வாய்வு கருதி 41/2 மாத காலத்தை நாம் செலவிடவேண்டியிருந்தது. இக்காலப் பகுதியில் "அரங்கியல் செயற்பாடுகளினூடே" இவ்வாய்வின் தேடல்கள் அமைந்தன. இதன் போது எமது சமூகம் கண்டுகொள்ள வேண்டிய, மனதை நெருடுகின்ற பல செய்திகள் வெளிவந்தன. அவற்றை சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் வெளிப்படுத்தும் வகையிலேயே அவை இங்கு தரப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் ஏன் குற்றச் செயல்கள் அதிகமான அளவில் இடம் பெறுகின்றன என்று முதலில் நோக்கலாம். ஒருவன் குற்றவாளியாவதற்கு பிரதானமான பல காரணங்கள் உண்டு. அவற்றுடன் பின்னிப் பிணைந்ததான பல உபகாரணிகளும் காணப்படுகின்றன.

*1) யுத்தம்* - இதனால் விளைந்த உப காரணிகள்

1. இடப்பெயர்வுகள்
2. குடும்ப உடைவுகள்
3. விழுமியச் சிதைவுகள்
4. கெடுபிடிகள்

*2) சிறுபிள்ளை பராயத்தாக்கங்கள் - வழிகாட்டத்தவறும் -*

1. பெற்றோர்கள்
2. ஆசிரியர்கள்
3. சமூக நிறுவனங்கள்

*3) கூட்டுவார் கூட்டம்*

*4) சட்டம் பற்றிய விளக்கமின்மை*

*5) சட்ட நடைமுறையாளர்களின் அசிரத்தை*

*6) தவறுக்குத் துணைபோகும் அரச, அரசியல் தலைமைகள்.*

### யுத்தம்

நீண்டகாலமாக இடம்பெற்று வந்த யுத்தம், சமூகக் கட்டுமானங்களை உடைத்திருக்கிறது. யுத்தச் செயற்பாடுகளும் அதன் பகுதிகளான உப காரணிகளும் ஒரு 'குற்றவாளியை உருவாக்குவதில் பாரிய செல்வாக்குச் செலுத்தியிருப்பதை எமது ஆய்விலே கண்டிருக்கிறோம். கசிப்பு வழக்கொன்றில் சம்பந்தப்பட்ட ஒருவரை நாம் சிறைச்சாலையில் சந்தித்தோம். அவரோடு 'அரங்கினூடாகத் கதைத்தபோது' இடப் பெயர்வினால் அலைக்கழிந்து போயிருந்த அவரின் வாழ்வின் சரிதம் எமக்குத் தெரிய வந்தது. உண்மையிலேயே இடப்பெயர்வானது தொழிலிழப்பு, மிதமிஞ்சிய ஓய்வு, விரக்தி, நெருக்கமாக வாழும் சூழல் ஆகியவற்றை யுத்தப் பிரதேச மக்களுக்குத் தந்தது. இப்படியான நிலைமைகள் ஒருவரைக் குற்றவாளியாக்குகின்றன என்பதை இவரில் காணமுடிந்தது.

"...அங்கமாறி இஞ்சமாறி அலைஞ்சதால என்னத்தையாவது செய்து பிழைப்பம் என்றுதான் செய்தனான். அதாலதான் இஞ்ச வந்திருக்கிறன்..." என்றவாறு அவர் கூறியது மேற்படி கருத்தை நிரூபிப்பதாயுள்ளது. இவ்வாறே யுத்தத்தால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் பலரைக் குற்றவாளியாக்கியிருப்பதை அங்கிருந்த பலரில் காணமுடிந்தது.

இன்றும் இடம்பெயர்ந்தநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களை அவர்களது விருப்பம்போல சொந்த வாழ்புலத்தில் மீளக் குடியேற அனுமதிப்பதன்மூலம் குற்றச் செயல்களை கணிசமான அளவுக்குக் கட்டுப்படுத்தமுடியும்.

யுத்தத்தின் ஒரு பகுதியாய் ஏற்பட்ட குடும்ப உடைவுகள் பலரைத் தனிமைப் படுத்திவிட்டது. இதனால் கட்டுப்பாடற்ற வாழ்க்கைக்கு அவர்கள் பழக்கப்படலாயினர். இந்தப் பின்னணி ஒருவனைக் குற்றச் செயல்களில் ஈடுபடத் தூண்டுகிறது.

பிற மாவட்டம் ஒன்றிலிருந்து வந்து, யாழ்ப்பாணத்தில் தனிமைப் பட்டுப் போன ஒருவர் இங்கு பாரிய களவுகளில் ஈடுபட்டிருக்கிறார். இவருடனான சந்திப்பின்போது குற்றவாளி உருவாக்கத்தில் குடும்ப உடைவின் தாக்கத்தை உணரமுடிந்தது.

"வீட்டைவிட்டு வெளிக்கிட்ட அண்டேயிலிருந்து ஊதாரியாத்திரிய வெளிக்கிட்டன்..." என்று அவர் கூறியது இங்கு சுட்டிக்காட்டத் தக்கது.

குடும்பக் கட்டமைப்புக்களில் ஆரோக்கியமான பற்றுறவும் உரிய கண்காணிப்பும் இருத்தல் நன்மை தரும். இவை சரிவர அமையப் பெறாதபோது குடும்ப உடைவுகள் ஏற்பட்டு, அதனால் தனிமைப்படுத்தப்படுபவர்கள் வழி தவறும் வாய்ப்புக்கள் அதிகம்.

எமது பிரதேசத்திலிருந்து வந்த யுத்தநிலைமை சமய, சமூக மட்டத்திலான விழுமியச் சிந்தனைகளை 'இரண்டாம்தர' நிலைக்குத் தள்ளியது. மக்களின் வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்கு ஏற்பட்ட நெருக்கடிகள் விழுமியம் சார்ந்த கருத்துக்களை மக்கள் மனதில் கொள்ள விடாது தடுத்தன.

யுத்தச் சூழலானது நேரடியாகவோ, மறைமுகமாகவோ மக்களின் மனங்களில் ஏற்படுத்திய வன்போக்கு, மனோபாவங்களும் விழுமியச் சிதைவுகளைத் தோற்றுவித்தன. இவற்றின் காரணமாக குற்றச் செயல்களில் ஈடுபடுதல் என்பது மிகச் சாதாரண விடயம் என்ற மாதிரியிலான தோற்றப்பாடு சிலரில் ஏற்பட்டது. இது குற்றச் செயல்களைத் தூண்டும் காரணிகளில் ஒன்றாக இருந்துள்ளது. பல களவு வழக்குகளின் பொருட்டு கைதாக்கப்பட்ட ஒருவர், அவர் தான் செய்த தவறுகளுக்காகவும் அங்கிருக்கும் ஏனைய கைதிகளுக்காகவும் இறைவனிடம் மன்றாடுவதாக எம்மிடம் கூறினார். இதேபோன்ற பல விழுமியச் சிந்தனைகள் குற்றச் செயல்களில் அவர் ஈடுபட்டுக் கொண்டிருந்த காலங்களில் அவருக்கு ஊட்டப்பட்டிருப்பின் சிலவேளை அவர் சிறைச்சாலைக்கு வராதிருந்திருக்கக் கூடும்.

இராணுவச் செயற்பாடுகள் தீவிரப்பட்டிருந்த காலப் பகுதிகளில் திடீரென ஏற்படும் சுற்றி வளைப்புக்கள், அடையாள அட்டைப் பரிசோதிப்புக்கள், அநாவசியக் கைதுகள் போன்ற கெடுபிடிகளால் மக்கள் அல்லற்பட்டனர். இத்தகைய செயற்பாடுகளால் தவிர்க்கமுடியாதபடி குற்ற நடத்தையில் ஈடுபட நிர்ப்பந்திக்கப் பட்டவர்களும் எம்மத்தியில் உள்ளனர். இக்காரணத்தினாலேயே குற்றவாளியாகிய ஒரு நபரைச் சந்தித்தோம். அவரது அடையாள அட்டை இராணுவத்தால் பறிக்கப்பட்டது. இதனால் வெவ்வேறு இடங்களில் அவர் கைதுசெய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார். தொழில்நிமித்தம்கூட வெளியே செல்லமுடியாத நிலை ஏற்பட்டதனால் மறைவாக வாழத் தொடங்கினார். கையில் பணம் தீர்ந்துபோன நிலையில் களவுகளில் ஈடுபட்டதாக அவர் கூறினார்.

இராணுவக் கெடுபிடிகளுக்குப் பயந்து, ஒளித்துத் திரிந்தவர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு மாற்றுவழியின்றிக் களவு, கசிப்பு போன்ற குற்ற நடத்தைகளில் ஈடுபட்ட அவல நிலையை நம் ஆய்வின்மூலம் கண்டுகொள்ள முடிந்தது.

### சிறுபிள்ளைப்பராய தாக்கங்கள்

சிறுபிள்ளைப் பராயத்தில் ஏற்பட்ட தாக்கங்கள் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் செல்வாக்குச் செலுத்துகின்றதெனப் பொதுவாகக் கூறப்படுவதுண்டு.

இக்கருத்தின் உண்மை நிலையை எமது ஆய்வுக்குட்பட்ட அனைவரிலுமே கண்டுகொள்ளமுடிந்தது.

பிள்ளைகளை வழிப்படுத்தல் தொடர்பான போதிய தெளிவு சில பெற்றோர்களிடம் இருப்பதில்லை. இதன் காரணமாக பலரின் வாழ்வு தவறான பாதைககுத் திருப்பப்படுகின்றது. யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அநேகரில் சிறுபிள்ளைப் பராயத்தின் தாக்கங்கள் காரணமாக கல்விமட்ட அடைவு மிகத் தாழ்ந்த நிலையிலேயே காணப்படுகிறது.

புகைப்பிடிக்கும் பழக்கமுள்ள தந்தையைப் பின்பற்றி அவரது மகன் ஒருதடவை புகைத்துப்பார்க்க முயன்றிருககின்றான். இதனைக் கண்ட அத்தந்தை நெருப்பில் காய்ச்சப்பட்ட கத்தியை மகனின் கன்னத்தில் வைத்துத் தண்டித்திருக்கின்றார். இதனால் அவருடைய மகன் மனக்கிலேசம் அடைந்து வீட்டைவிட்டு ஓடியிருக்கிறான். அதன்பின் ஏற்பட்ட பல சூழ்நிலைகள் அவனைக் குற்றவாளி ஆக்கிவிட்டன.

தனிப்பட்ட முரண்பாடு ஒன்றில் தாக்குதலுக்கு இலக்கான மகனை "நீ அவனுக்குப் போய் அடிச்சுப் போட்டு வந்தால்தான் உனக்கு வீட்டில் சோறு" என்று ஒரு தாய் தன் மகனுக்குக் கூறியதால் மீண்டும் மோதலுக்குச் சென்று, அது பெரும் விவகாரமாக மாறி அவனை இன்று ஒரு கைதியாக்கிவிட்டிருக்கின்றது. இவ்விளைஞன் தற்போது பல வழக்குகளை எதிர்கொள்ள வேண்டியவனாக இருக்கின்றான். இவ்வாறே பல உதாரணங்களை ஆய்வுக்குட்பட்ட ஒவ்வொருவரிடமிருந்தும் எடுத்துக்காட்டமுடியும்.

மாணவப் பருவத்தில் முறையற்ற விதத்தில் ஆசிரியர்களால் வழிநடத்தப்படும் பலர் வன்நடத்தை உடையவர்களாக மாறும் வாய்ப்புக்கள் அதிகம். மாணவன் ஒருவன் செய்த தவறுக்காக அதிபரால் வெகுநேரம் வெயிலில் விடப்பட்டான். இதன் எதிர் விளைவாய் பின்பு அந்த மாணவன் அதிபரின் தலையை கல்லாலெறிந்து காயப்படுத்தினான். இதனால் கோபமுற்ற அதிபர் அவனது மனோநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதை விடுத்து பாடசாலையில் இருந்தே அவனைத் துரத்திவிட்டார். இந்நிலையால் பாதிக்கப்பட்ட அம்மாணவன் பின்பு பெரும் குற்றங்கள் இழைப்பவனாக மாறி இன்று சிறைச்சாலையில் இருக்கிறான்.

"பள்ளிக் கூடத்தில் எங்கள மொக்குகள் எண்டு சொல்லி அதிபரும் ரீச்சர்மாரும் தங்கட வீட்டு வேலைகளைச் செய்விக்கிறவை. இந்த அரியண்டங்களால பள்ளிக் கூடமே போகாமல் விட்டுட்டம்" இவ்வாறு அங்கிருக்கும் ஒருவர் கூறினார். அவரோடு தொடர்ந்து கதைத்தபோது இந்தப் பின்னணியே அவரைக் குற்றமிழைக்கத் தூண்டிய அடிப்படைக் காரணியாக இருந்திருக்கின்றது என்பது தெரிந்தது.

வழிகாட்டும் அமைப்புகளாக இருக்கவேண்டிய பல சமூக நிறுவனங்களே அதைச் செய்யத்தவறியிருக்கின்றன என்ற கசப்பான உண்மை எமது ஆய்வின் வழி தெரியவந்தது.

பெற்றோர்களாலும், ஆசிரியர்களாலும் வழிப்படுத்தப்பட முடியாது எனக்கருதப்பட்ட ஒருவன், 'சீர்திருத்தப் பாடசாலைக்கு' அனுப்பப்பட்ட போது அங்கும் முறையான வளப்படுத்தலுடன் நடத்தப்படவில்லை. போதிய உணவு கொடுக்கப்படாமை, கடுமையான தண்டனைகள், அதிக வேலைப்பளு என்பன அவனை விரக்திக்குள்ளாக்கித் திருட்டுத்தனமாக அவனை அங்கிருந்து வெளியேற வைத்தன. அன்றிலிருந்து அவன் வீட்டை மறந்தான். தொடர்ச்சியாக ஏற்பட்ட இக்கட்டுக்களாலும் போதிய வளப்படுத்தல் இன்மையாலும் அவன் குற்ற நடத்தைகளில் ஈடுபட்டு தற்போது கைதியாக்கப்பட்டிருக்கின்றான்.

சிறுபிள்ளைகளுக்கு வழங்கப் படுகின்ற தண்டனைகள் பெரும்பாலும் அதிக தாக்கம் விளைவிக்கக் கூடியனவாவே வழங்கப்படுகின்றன. இது மிகவும் ஆபத்தானதாகும். அதீத தண்டனை ஒருவனை நல்லவழியில் இட்டுச்செல்வதிலும் பார்க்க அவனை துர்நடத்தைகளில் ஈடுபடவே வழி செய்யவல்லன.

இத்தகைய தவறான வழிப்படுத்தல்கள் பெற்றோர்களாலும், ஆசிரியர்களாலும், சமூகநிறுவனங்களாலும் இன்றும் இடம்பெற்றவண்ணமே உள்ளன. இது கவனத்தில் கொள்ளப்பட்டு அனைத்துத் தரப்பு மட்டத்திலும் விழிப்பு நிலை ஏற்படுத்தல் அவசியம். *(வளரும்)*



கொழும்பு நாலந்தாக் கல்லூரிக்கு யாழ்.மாவட்ட மாணவர்கள் சார்பில் அண்மையில் அன்பளிப்பு வழங்கப்பட்டது. அன்பளிப்புப் பொருள்களை வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர் டோறஸ் வீ.மு.இராஜசிங்கம் மற்றும் மத்திய கல்லூரி அதிபர் கே.இராஜதுரை மற்றும் யாழ்.மாவட்ட உதவி சாரண ஆணையாளர் ஆகியோரைப் படத்தில் காணலாம். (ஐ)

# சாவகச்சேரி படுகொலை வழக்கு: சந்தேகநபர் ஒருவருக்கு பிணை

யாழ்ப்பாணம்,மே28

சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு அண்மையில் மினிபஸ் சங்கத் தலைவர் படுகொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டாம் சந்தேக நபருக்கு நேற்றுமுன்தினம் பிணை வழங்கப்பட்டது. முதலாவது சந்தேக நபரின் பிணைமனு நிராகரிக்கப்பட்டது.

கடந்த மாதம் 23ஆம் திகதி சாவகச்சேரி பஸ் நிலையப் பகுதியில் வைத்து இனந்தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்ட சாவகச்சேரி மினிபஸ் சங்கத் தலைவர் மக்மிலன் அற்புதராசாவின் வழக்கு நேற்றுமுன்தினம் யாழ்.மேல் நீதிமன்றத்தில் நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இரண்டாவது சந்தேக நபரான குலவீரசிங்கம் சந்திரபாலன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சந்தேக நபரை பிணையில் அனுமதிக்கக் கோரி தமது வாதங்களை முன் வைத்தார். அதனை ஏற்றுக்கொண்ட நீதிவான் சந்தேக நபரை 10 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், சாவகச்சேரி நீதிமன்ற எல்லைப் பிரிவில் வசிக்கும் இரு ஆள்களின் பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

ஒவ்வொரு வாரமும் சனிக் கிழமை அல்லது ஞாயிற்றுக் கிழமைகளில் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் அவர் கையொப்பம் இடவேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

முதலாம் சந்தேக நபர் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட பிணைமனு நிராகரிக்கப்பட்டது. (ம-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima, Broiler மற்றும் இறைச் சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து உங்களுக்குத தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (18475)

புறொயிலர் 1 Kg - 180/=. மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 1)மான்ஸ் பாடசாலை வீதி, டச்றோட், உடுவில். 2) பொன்னாலை வீதி, விதானை வளவு, மானிப்பாய். (18339)

## இலக்கிய விமர்சனம்

இந்த நூலின் விமர்சனத்தை உதயனில் வாசித்தீர்களா? அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய நூலில் உள்ளவை: 1.கோடை நாடகம் 2நாகம்மாள் நாவல் 3.தமிழில் இலக்கிய விமர்சனம் 4.எங்களுக்கு வேண்டிய நாடகங்கள். ரூபா 40/= (18473)

## தவறிவிட்டது

கீரிமலை றோட், மாவிட்டபுரத்தைச சேர்ந்த வைத்தீஸ்வரன் சாரங்கன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (802533993V), பல்கலைக் கழக அடையாள அட்டை, Faculty அட்டை என்பன கஸ்தூரியார் வீதிக்கும், திருநெல்வேலிக்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் No.5, அம்பலவாணர் வீதி, சுன்னாகத்தில் ஒப்படைக்கவும். T.P. 0777-176971 (18468)

அச்சுவேலியைச் சேர்ந்த செல்லப்பா பத்மலோஜினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.517970328V), விசேட அடையாள அட்டை என்பன 12.05.2003 அன்று யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் K.சிவசுப்பிரமணியம், கச்சாய் வீதி, சாவகச்சேரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (18478)

## வகுப்புகள்

2003.06.01 தொடக்கம் ஆங்கிலம், சிங்களம் அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். வீடுகளுக்கும் சென்று கற்பிக்கப்படும். 30ஆம் திகதிக்கு முன் தொடர்புகொள்ளவும். அ.இராஜரட்ணம் 56, சந்திரசேகரப் பிள்ளையார் வீதி, கல்வியங்காடு. (18447)

## வீடு விற்பனைக்கு / வாடகைக்கு

இல.19, கடைச்சாமி வீதி, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் கூடிய 2 3/4 பரப்புக்காணியில் அமைந்த விசாலமான மேல்மாடி வீடு விற்பனைக்கு அல்லது வாடகைக்குண்டு. தொடர்பு: T.P.No. 01-507863. (18416)

## பருத்தித்துறை நகரில் மலசலகூடமின்றி மக்கள் சிரமம்

பருத்தித்துறை நகரில் பொது மலசலகூடம் ஒன்று இன்மையால் நகருக்கு வந்துசெல்லும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளார்கள்.

மத்திய பஸ்நிலையம், வங்கிக் கிளைகள், மரக்கறி, மீன்சந்தைகள் போன்ற மக்களின் அன்றாட அலுவல்களுக்கான மையங்கள் அமைந்துள்ள நகர்ப் பகுதியில் இயற்கைக் கடன்களைக் கழிக்க ஓர் இடமின்றி பொது மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர். (ஒ-173)

## சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தினர் அறிவிப்பு

வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தினர் சங்க ஒழுங்குவிதிகளை மீறும் உறுப்பினர்கள் மீது ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரித்துள்ளனர். நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட குறைவாக அறவிடுபவர்கள்மீதும் விடுமுறை நாள்களில் வீடுகளுக்குச் சென்று சிகையலங்கரிப்புத் தொழில் செய்பவர்கள் மீதுமே ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் மேற்படி அலுவலர்களின் சோதனை நடவடிக்கைகளில் அங்கத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்கும் படியும் சங்கம் கோரியுள்ளது.(ஒ-70)

# சேவைநலன் பாராட்டு

39வருட சேவையை நிறைவு செய்து ஓய்வுபெற்ற



வடவலய
உதவிப் பொது முகாமையாளர்
மக்கள் வங்கி
உயர்திரு.சி.இளம்பிறைநாதன்
அவர்களின்
சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கின்றோம்.

வாடிக்கையாளர்,
மக்கள் வங்கி,
சாவகச்சேரி.

(18481)

## தாதிகள் பயிற்சிப் பாடசாலை விரிவுரை மண்டபம் கட்டுவதற்கான கேள்வி கோரல்

யாழ். போதனா வைத்தியசாலை தாதிகள் பயிற்சிப் பாடசாலை விரிவுரை மண்டபம் கட்டுவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்களை யாழ்.வைத்தியசாலையில் 31.05.2003 வரை மீளளிக்கப்படாத ரூபா 2000 ஐ கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 07.06.2003 காலை 10.00 மணி ஆகும்.

ஏற்கனவே பணம் செலுத்தியவர்கள் அப்பற்றுச் சீட்டைக்காட்டி விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர்,
வைத்திய கலாநிதி என். சதுர்முகம்,
அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி-28114)

# பதவி வெற்றிடம்

யாழ்.நகரில் உள்ள பிரபல்யமான பல்பொருள் அங்காடிக்கு பின்வரும் பதவிகளுக்கு தொழிலனுபவம், தகைமை உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சுயவிபரங்களுடன் 05-06-2003ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

1. கணக்காளர்
   Accountant
2. விற்பனைப் பிரதிநிதிகள்
   Sales Representative
3. சாரதிகள்
   Drivers
4. மின்தொழில்நுட்ப உதவியாளர்
   Electrician

விளம்பர இலக்கம் 1905,
மே/பா : உதயன்

(18483)

# ஓராண்டு உணர்வலைகள்



| தவப்பேறு | சிவப்பேறு |
|---|---|
| 17 | 08 |
| - | - |
| 08 | 06 |
| - | - |
| 1937 | 2002 |

## அமரர் தம்பிப்பிள்ளை சூடாமணி

(பிரபல எழுத்தோவியர் - அகிலன்ஸ்)

ஓராண்டு சென்றதப்பா ஓயவில்லை நம் துயரம்!
ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் ஆறாது நம்துயரம்!
பத்மா, பொபி, சுகு, சியா என்ற அன்பு மொழி
எப்போது இனி நாம் கேட்போமப்பா?

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

205/2, கண்டி வீதி,
அரியாலை.

பிரிவுத்துயரில் வாடும்:
குடும்பத்தினர்.

(18441)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி சசிரேகா குணரட்ணம்
அவர்களின் பாசமிகு தந்தையார்

## மயில்வாகனம் குணரட்ணம்

(அதிபர், எழுத்தூர் றோமன் கத்தோலிக்க பாடசாலை)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாகச் சமர்ப்பித்து, அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

முதலாம் வருட வணிகபீட மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(18484)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| அன்னை மடியில் | ஆண்டவன் மடியில் |
|---|---|
| 10 | 28 |
| - | - |
| 01 | 04 |
| - | - |
| 1923 | 2003 |

## திருமதி கோவிந்தசாமி தங்கம்மா

('ஆயர்பாடி', துன்னாலை மத்தி, கரவெட்டி)

பண்பும், பக்தியும் நிறைந்து பணிவுடன் வாழ்ந்து சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி மறைந்த துயரச்செய்தி கேட்டு உடன்வந்து உதவிய அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்கள், தொலைபேசி, தொலைநகல், மலர் அஞ்சலி மூலம் அனுதாபத்தைத் தெரிவித்தோர் அனைவர்க்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (28-05-2003) புதன்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

மக்கள்: பாரதி சிவயோகன்,
கோ.பாரதிநாதன்,
மருமக்கள்: வே.சிவயோகன்,
(வீதி அபிவிருத்தித் திணைக்களம், கிளிநொச்சி)
பா.கனகாம்பிகை.

'ஆயர்பாடி'
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

(18479)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பத்மாவதி சிவப்பிரகாசம் (பட்டு)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி சிவப்பிரகாசம் அவர்கள் 27.05.2003 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும் சாந்தினிதேவி (கனடா), தர்மினிதேவி, தர்மேந்திரன் (பிரான்ஸ்), ஸ்ரீறமணா, ஸ்ரீசங்கர் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவசோதி (கனடா), சத்தியவான் (லண்டன்), சுதந்திராதேவி (பிரான்ஸ்), நிஷாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் அழகேந்திரன் (பட்டு மாமா) அவர்களின் அன்புச் சகோதரியும் சங்கீதா, சுஜிதா, சுதர்சினி, சிவகுமார் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

312-1592 S.W
Marine Drive,
Vancouver B.C
Canada VGP-GMI

தகவல்:
மக்கள்
14, வித்தியாலய வீதி, கல்கிசை.
T.P. 716487

(C/28117)

## திருமதி இராசபூபதி திருநாவுக்கரசு

ஏழாலை வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி இராசபூபதி திருநாவுக்கரசு நேற்றுமுன்தினம் (26-05-2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் திருநாவுக்கரசு நாவேந்தனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மலரரசி மற்றும் மதியரசி (கனடா), அரசமோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்றவர்களான இராசையா - பசுபதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இரத்தினகோபாலசிங்கம் (ஆசிரியர்) மற்றும் இரத்தினபூபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மதுரி (கொழும்பு), கெவின், அஸ்லின் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நேற்று (27-05-2003) செவ்வாய்க்கிழமை ஏழாலை வடக்கில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை வடக்கு கிறிஸ்தவ மயானத்தில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

'மலரகம்'
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

தகவல்:
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

(18476)

## ஜெகசோதிநாதன் காந்தரூபன்

கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் ஜெ.காந்தரூபன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் தரம்-8) 27.05.2003 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் யா/பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் ஜெகசோதிநாதன் - ரேவதி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் சசினா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி), திபாகரன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன்), கீர்த்தனா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - அன்னபூரணம் மற்றும் தேவகடாட்சம் - ஜெகதாம்பாள் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.03) புதன்கிழமை காலை 10 மணியளவில் 111, கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

111, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
வே.ஜெகசோதிநாதன் (தந்தை)

(18491)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் பஜாஜ் மோட்டார் சைக்கிளுடன் வெற்றி நிச்சயம் !






விலை ரூபா 107,835/-
• 143.43 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• 5 கியர்கள் கொண்ட வேக ஒழுங்கு.




விலை ரூபா 89,930/-
• 111.6 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• நியம சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 60 கி.மீ.




விலை ரூபா 64,200/-
• 99.35 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.




விலை ரூபா 68,568/-
• 99.35 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.




விலை ரூபா 82,355/-
• 111.6 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• நியம சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 60 கி.மீ.




விலை ரூபா 59,104/-
• 92 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் 100kmpl வேகம்.
• ஏரோடைனமிக் ஸ்டைல்.
• மல்டி ஃபோக்கல், ஒக்டோபீரிஸம் பிரதிபலிப்பு முகவிளக்கு.




விலை ரூபா 83,811/-
• 145.45 சீசீ 2 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 65 கி.மீ.




விலை ரூபா 71,526/-
• 99.35 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 91 கி.மீ.

mel ads 3/5/2164

ஒவ்வொரு மோட்டார் சைக்கிளுடனும் ஜக்கட் ஒன்று இலவசம்.

மேற்படி விலைகள் பெ.சே.வரி புற நீங்கலானவை. மற்றும் விலைகள் முன் அறிவித்தலின்றி மாற்றத்திற்குரியவை.

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியிடமிருந்து** - ஒரு பஜாஜ் மோட்டார் சைக்கிளை நீங்கள் வாங்குவீர்களானால் நீங்கள் நாடும் தரச்சிறப்பு, அபாரமான செயற்பாடு, நம்பகத்தன்மை அனைத்தும் நிறைவேறுகின்றது. நீங்கள் தனிப்பட்ட அல்லது குடும்ப வாழ்க்கைப் பாவனைக்கு கச்சிதமாக அமையும் பலதரப்பட்ட, நிகரில்லாத, உறுதிமிக்க, பன்முகப் பாவனைக்குரிய பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள் வகை வகையாக எம்மிடம் உண்டு.

நீங்கள் நாடுவது வேகமா? சிக்கனமா? அல்லது தன்னிகரில்லா தனிச்சிறப்பா? அது எது வேண்டுமானாலும் DPMC வழங்கும் வகையறாக்களில் நீங்கள் பூரண நம்பிக்கை வைக்கலாம். மற்றும் DPMC யின் நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படும் சேவை, பராமரிப்பு மற்றும் உதிரிப்பாக வியாபார வலையமைப்பினூடாகவும், பிராந்திய அலுவலகங்களுடாகவும் தன்னிகரற்ற வேகமான வாடிக்கையாளர் சேவையையும் DPMC யின் ஒன்றுதிரட்டிய வளங்களையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

தன்னிகரற்ற உத்தரவாதம்

பஜாஜ் பல்லாண்டுகாலம்

## டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்.

75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600
பெக்ஸ் : 074-700677, 687175. ஹொட்லைன் : 074-715050

அதிகாரம் பெற்ற விற்பனையாளர் : குறிஞ்சி டிரேடர், 75, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777-979279, 0777-155730

: குறிஞ்சி டிரேடர், 6, நவீன சந்தை, சாவகச்சேரி.
தொ.பே: 0777-979279, 0777-155730

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்ட வலைப்பந்தாட்டம்; மீண்டும் யாழ்.மாவட்ட அணி சம்பியன்

யாழ்ப்பாணம்,மே28

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட மாகாண மட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்ட அணி இந்த வருடமும் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இச்சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் முள்ளியவளை வித்தியானந்த மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

யாழ்மாவட்ட அணியும் திருமலை மாவட்ட அணியும் மோதிய இவ்விறுதி ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணி 61-15 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் திருமலை அணியை தோற்கடித்து வெற்றியீட்டியது.

இவ்வெற்றியின் மூலம் யாழ். மாவட்ட அணி தொடர்ச்சியாக 6 தடவைகள் சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட பெருமையைப் பெற்றுள்ளது.

யாழ்.மாவட்ட அணி முதல் சுற்றுப்போட்டியில் வவுனியா மாவட்ட அணியை 53 - 01 என்ற புள்ளியாலும், அரையிறுதியில் அம்பாறை மாவட்ட அணியை 61 - 15 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வெற்றிகள் பற்றி யாழ்மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி கே.ஏ. எல். ரூபசிங்க கருத்து தெரிவிக்கையில கூறியதாவது:-

எமது மாவட்ட வீராங்கனைகள் அனைவரும் தமது கடும் உழைப்பின மூலம் யாழ்மாவட்டத்துக்கு பெருமை சேர்த்துள்ளனர்.


இந்தச்சுற்றுப்போட்டியில் அரையிறுதிப்போட்டி மற்றும் இறுதிப்போட்டி என்பன எமது வீராங்கனைகளுக்கு பெரும் சவாலாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

அரையிறுதியில் விளையாடிய அம்பாறை மாவட்ட அணி மிகவும் பலம் வாய்ந்ததாக இருந்தது. ஆயினும் எமது வீராங்கனைகளின் வேகத்துக்கு அவர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. குறைந்த புள்ளிகளுடன் அம்பாறை மாவட்ட அணியினர் தோல்வியைத் தழுவிக்கொண்டனர்.

அதைப்போலவே இறுதியாட்டத்தில விளையாடிய திருமலை மாவட்ட அணியும் முதல் இருபாதி ஆட்டங்களின் போதும் எமது அணிக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. பின் இரு பாதி ஆட்டங்களிலும் அவர்களால் நிலைத்து நின்று ஆடமுடியாமல் தோலவியைத் தழுவினர்.

இறுதிப்போட்டியில் எமது அணி அதிக புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றமைக்கு அனைவரது பங்களிப்பும் இருந்தது. குறிப்பாக அணித்தலைவி நீரஜா, சுகுணா, மதிவதனா, அஜந்தா, றெமிந்தா மற்றும் பிரபா ஆகியோருடைய விளையாட்டுத் திறன் வெற்றிக்கு உதவியது - என்றார்.

(ஒ-5)



பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்ற பிரெஞ்ச் ஓபன் டென்னிஸில், ஜேர்மனியின் பார்பரா ரிட்னரை 6:2, 6:1 என்ற நேர் செட்களில் வென்ற களிப்பில் நடப்புச் சம்பியன் செரீனா வில்லியம்ஸ்.

# மாகாணமட்ட கரப்பந்தாட்டம் இம்முறை யாழ்.மாவட்டத்தில்

யாழ்ப்பாணம்,மே28

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் நடத்தப்படும் மாகாணமட்ட கரபபந்தாட்டச்சுற்றுப்போட்டிகள் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 31 ஆம் மற்றும் முதலாம் திகதிகளில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயத்தில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை , வவுனியா, மட்டக்களப்பு, கிளிநொச்சி, திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய எட்டு மாவட்டங்களின அணிகள் இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளன.

இப்போட்டிகளை நடத்துவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி கே.ஏ. எவ்.ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

## கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம்,மே28

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் அமரர் இ.ரட்ணசாமி ஞாபகார்த்தமாக கழக மைதானத்தில் நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை நடைபெறும் ஆட்டத்தில் வல்வை கழுகுகள் விளையாட்டுக்கழக அணியும், சென் .தோமஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணியும் மோதவுள்ளன.

(ஒ-5)

# உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாவாந்துறை கலைவாணி அணி வெற்றி

யாழ்ப்பாணம்,மே28

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால நடத்தப்பட்ட 22 வயதுக்கு உட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் சம்பியன கிண்ணத்தைக் கைப்பற்றியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில நடைபெற்ற இவ்விறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியும், நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணியும் மோதின.

முன்பாதி ஆட்டத்தில் நாவாந்துறை அணிக்கு கோல் பெறும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் மூலம் அவ்வணியின் முன்னணி வீரர் பிறேம், தமது அணிக்கு ஒரு கோலைப்பெற்றுக் கொடுத்தார். இதனால் 1-0 என்ற கோல கணக்கில் முதல் பாதி ஆட்டம் நிறைவடைந்தது.

இதன் பின் இரண்டாம் பாதி ஆட்டம் மேலும் விறுவிறுப்பை அடைந்தது. நாவாந்துறை அணியினர் மேலும் ஒரு கோலைப்பெற்று தமது வெற்றியை உறுதிப்படுத்திக்கொண்டனர்.

இதனால், நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

இவ்வாட்டத்தின் சிறப்பாட்டக்காரராக நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக வீரர் பிறேம் தெரிவு செய்யப்பட்டார்.

(ஒ-5)

# ஆஸ்திரேலியாவின் வெற்றிப்பயணம் மேற்கிந்தியத் தீவில் முடிவுக்குவந்தது

போர்ட் ஒப் ஸ்பெயின்,மே28

ஒருநாள் கிரிக்கெட்டில் தொடர்ந்து 21 முறை வெற்றி பெற்ற ஆஸ்திரேலியாவின் வெற்றிப்பயணத்திற்கு முற்றுப புள்ளி வைத்தது மேற்கிந்தியத்தீவுகள அணி.

போர்ட் ஒவ் ஸ்பெயினில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 5 ஆவது ஒருநாள் ஆட்டத்தில், மேற்கிந்தியத்தீவுகள் 39 ரன்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவைத் தோற்கடித்தது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நான்கு ஆண்டுகளுக்கு பிறகு மேற்கிந்தியத்தீவுகள் பெறும் வெற்றி இது.

கடைசியாக பிரிட்ஜ் டவுனில் நடைபெற்ற ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள்வென்றது. அதன் பிறகு தொடர்ந்து 11 .ஆட்டங்களில் தோல்வியே.

அதேசமயம், ஆஸ்திரேலியா கடந்த ஜனவரியில் சிட்னியில் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கையிடம் கடைசியாக தோல்வியுற்றது.

ஞாயிறு நடந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 290 ஓட்டங்களைக்குவித்தது.

பெவல் ஹைன்ட்ஸும் அணித் தலைவர் லாராவும் பொறுப்புடன் விளையாடி அணியின் எண்ணிக்கையை கிடுகிடுவென உயர்த்தி ஆஸ்திரேலியாவுக்கு சற்றுக் கடினமான இலக்கை நிர்ணயித்தனர்.

தொடர்ந்து ஆடிய உலகசம்பியன் ஆஸ்திரேலியா 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 251 ஓட்டங்களைச்சேர்த்து தோல்வியுற்றது.

ஆஸ்திரேலியாவின் தொடர்வெற்றியை லாரா தனது சொந்த மண்ணில் தடுத்து நிறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக அதே மைதானத்தில சனிக்கிழமை நடைபெற்ற நான்காவது ஆட்டத்தில், மேற்கிந்தியத்தீவுகளை 67 ரன்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து 4:0 என தொடரை வென்றது ஆஸ்திரேலியா.

இத்தொடரில் தற்போது 4:1 என முன்னிலை பெற்றுள்ளது ஆஸ்திரேலியா.

(ஒ)

# பிரெஞ்சு பகிரங்க டென்னிஸ்: செரீனா 2 ஆவது சுற்றுக்குத் தகுதி

பிரெஞ்சு பகிரங்க மகளிர் ஒற்றையர் பிரிவுப்போட்டியின் 2 ஆவது சுற்றுக்கு நடப்பு சம்பியனான அமெரிகாவின் செரீனா வில்லியம்ஸ் முன்னேறியுள்ளனர்.

பிரெஞ்சு பகிரங்க டென்னிஸ் போட்டியில் சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக்கொள்ளும் முயற்சியில் இறங்கியிருக்கும் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் 6:2, 6:1 என்ற செட் கணக்கில் ஜேர்மனியின் பார்பரா ரிட்னரை வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

செரீனா தனது 2 ஆவது சுற்றில் இந்தோனேசியாவின் ஏஞ்சலிக் விட்ஜாஜா அல்லது சுவிட்ஸர்லாந்தின் மேரிகெய்யானே மிகேலியனை எதிர்கொள்ளவிருக்கிறார்.

ஏற்கனவே நான்கு கிராண்ட் ஸ்லாம் பட்டங்களைத் தொடர்ந்து கைப்பற்றியிருக்கும் செரீனா, தொடர்ச்சியாக தனது 5 ஆவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை எதிர்நோக்கி பிரெஞ் பகிரங்கப் போட்டியில் களம் இறங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், சமீபகாலமாக செரீனாவின் விளையாட்டில் ஏற்ற இறக்கங்கள் இருந்து வருகின்றன. சார்ல்ஸ்டனில் நடைபெற்ற போட்டியில் ஜஸ்டின் ஹெனினிடமும் ரோமில் நடைபெற்ற போட்டியில் பிரான்ஸின் அமேலி மொரேஷ்மோவிடமும் செரீனா தோல்வியடைந்தார்.

(ஒ)

# ஆசிய கிரான்ட்பிறிக்ஸ் மெய்வன்மை ஆரம்பம்


ஆசிய கிரான்ட் பிறிக்ஸ் மெய்வன்மைப் போட்டிகளின் முதலாம் கட்டப போட்டிகள் இன்று நடைபெறுகின்றன.

இந்தியாவின் ஹைதராபாத் நகரில் இப் போட்டிகள் ஆரம்பமாகின்றன.

சார்ஸ்நோய் அச்சுறுத்தல் காரணமாக சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் இப் போட்டிகளிலிருந்து விலகியுள்ள்னர்.

எனினும், ஆசியாவின் 20 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த முன்னணி போட்டியாளர்கள் இதில் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் சார்பில் 8 பேர் இப் போட்டிகளில் பங்குபற்றுகின்றனர். கடந்த தடவை 100 மீற்றர், 400 மீற்றர் போட்டிகளில் இலங்கை வீராங்கனை தமயந்தி தர்ஷா முதலிடம் பெற்றார்.



பந்தை எல்லைக்கோட்டுக்கு அப்பால் விரட்டும் பிரயன் லாரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூங்கில் எடுத்து முறையோடு கட்டி கடதாசியொட்டிய கண்கவர் பட்டங்கள்

பண்பாட்டு இயல்புகளிலே விளையாட்டும் ஒன்றாகும். விளையாட்டு மனுக்குலத்தின் வரலாற்றிலே இடையறாது நிகழ்ந்து மாற்றம் பெற்று வரும் விடயமாகும். பொழுது போக்குடன் மகிழ்ச்சியுடன் இணைந்து வளரும் விளையாட்டின் வகைகள் பல. அவற்றிலே பட்டம் ஏற்றலும் ஒன்றாகும்.

பட்டம், கொடி, காற்றாடி என்பன ஒரு நிலையிலே ஒரு பொருள் குறிக்கும் பல சொற்கள்.

பட்டம், கொடி என்பனவே வழக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பட்டம் விடுதல் கிராமிய விளையாட்டாகவே பெரும்பாலும் விளங்குகிறது. ஆயினும் கால மாறுதலாலே நகர, தேசிய விளையாட்டாகவும் இது விளங்குகிறது.

பட்டம் ஏற்றுதல் பொழுது போக்கானதாக அமைவதை பரவலாக கண்டுகொள்ளமுடியும். கொடிஏற்றுவதற்கு காற்று வழங்கும் சூழல் மிக முக்கியமானதாகும். வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று, தென்கீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று ஆகிய இரு காலங்களிலும் இந்த விளையாட்டு நடைபெறுவது உண்டு.

யாழ்ப்பாணத்திலேயே இவ்விளையாட்டு வடகீழ்பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலத்திலே நடைபெறுவதாகும்.

யாழ்ப்பாணத்திலும் இந்த விளையாட்டுக்கள் கடற்கரைப் பிரதேசங்களிலேதான் பெருமளவிற்கு பிரசித்தி பெற்றவையாக காணப்படுகின்றன. கடற்கரைப் பிரதேசத்திலே வாடைக் காற்று வீசும் காலம் இதற்கு உகந்த காலமாகும்.

விடுமுறைக்காலமாக இருக்கின்றமை, நிறைவான ஓய்வு நேரம், பட்டம் கட்டும் சாதனங்கள் கிடைக்கும் வாய்ப்பு ஆகியவை இதற்கு உதவுகின்றன.

யாழ்ப்பாணத்திலே உள்ள வடமராட்சிப் பகுதியிலே குறிப்பாக கடற்கரைப் பிரதேசத்திலே நடைபெறும் இவ்விளையாட்டிலே ஏற்றப்படும் கொடிகள், பட்டங்கள் என்பன பற்றி பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை தனது காதலியாற்றுப்படையிலே பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*"மூங்கில் எடுத்து முறையொடு கட்டிக்*
*கடதாசியொட்டிக் குஞ்சம் புனைந்த*
*கொக்குக் கொடியும் கோதறு பருந்தும்*
*வளம்பெறும் வாலாவகையில் சந்திரன்*
*எட்டு மூலையும் கட்டுக் கொடியும்*
*உரற்கொடி மீன்கொடி உயர் ஆட்கொடியும்*
*விண்ணை யளாவி வெகுவாய்ச் சாடி*
*கரணம் பலமுறை எழுத்தெழுந்து தடித்துப்*
*பூட்டிய விண்கள் பொலிவொடு கூவக்*
*காற்றோடு சேண்புகு மாண்புடையோதை"*

ஈர்க்கு, மூங்கில், நூல், வர்ணக் கடதாசிகள் (ரிசு, வாணிஸ்பேப்பர்), வடலிமட்டையின் நாரிலே உருவாக்கப்படும் விண் ஆகியன பட்டம் கட்டத் தேவைப்படுகின்றன.

அன்று பட்டம் விடுவதற்கு பெரிதும் பயன்படுத்தப்பட்டது தூண்டில் கயிறு, முறுக்கப்பட்டு பசை பூசப்பட்ட சணற்கயிறு ஆகியனவாகும்.

இன்று பேராசிரியர் சுட்டும் கொடி வகைகள் காலத்திற்கு ஏற்ப வேறு வடிவங்களைப் பெறுகின்றன. நூல் வகையிலே இன்று நையிலோன், குறுலோன் ஆகியன பயன்படுத்தப்படுகின்றன. 'விண்' அன்று இயற்கையான வடலிமட்டை நாரிலே இருந்து பெறப்படுகின்றன. இன்று செயற்கை நார் பயன்படுவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

முற்காலத்திலே மிகப் பெரிய கட்டுக் கொடிகள், படலங்கள், கொக்குப் பட்டங்கள் கடற்கரைப்பகுதியிலேயே பெரும்பாலும் ஏற்றப்பட்டன. இவை பெரும்பாலும் கட்டு மரங்களிலே கடற் பரப்பிலே இழுத்து ஏற்றப்பட்டன.

இன்று பெரிய பட்டங்கள் ஏற்றப்படுகின்றன என்பது உண்மையே எனினும் பெரும்பாலும் தொடுப்புப் பட்டங்கள் ஏற்றப்படுகின்றன.

**எம்.சிறிபதி**

பட்டம் கடற்கரை வெளி, மைதான வெளி ஆகிய இடங்களிலே ஏற்றப்பட்டன. ஆயினும் மக்கள் நடமாடும் தெருக்களிலே பாலர் பட்டம் விடுவதும் வழக்கமாகும். அன்றும் இன்றும் போக்குவரத்து மிகுந்த இடங்களிலே பட்டம் ஏற்றுவது சில வேளைகளிலே ஆபத்தானவையாகவும் அமைந்துவிடுவது உண்டு. வாகனங்கள் மோதுவதாலே சிறுவர்களுக்கு உடல் ஊறுகள், உயிர் ஆபத்துக்கள் ஏற்படுவதுமுண்டு.

பிள்ளைகள் பட்டம் விடும்பொழுது அவற்றின் மூலம் இன்பம் அடைகின்றார்கள். பட்டம் ஏறுவதாலே மாத்திரம் இந்த மகிழ்ச்சி கிடைப்பது இல்லை. ஏற்ற முற்படும் பொழுது எதிர்நோக்கும் இடர்பாடுகளைக் களைந்து, முறியடித்து வெற்றி காணும் பொழுது அது அர்த்தம் உடையதாகின்றது.

பட்டம் ஏற்றுவது என்பது சிறுவர்களுக்கு உவப்பான காரியமாக இருப்பது போலவே, அவை போட்டி மனப்பாங்கையும் ஏற்படுத்தும் குணம் கொண்டது.

வடிவங்களின் ஒழுங்கமைக்கும் திறன், சிறந்த நிறங்களைத் தெரிவு செய்யும் திறன் ஆகியன வள்ர்ச்சியடைவதற்கு இக்கொடிவிடும் பொழுது போக்கு விளையாட்டுப் பெரிதும் பயன் அளிக்கிறது. கொக்குக் கொடி, கந்தவனக் கொடி கட்டுவதிலே போட்டியும் அப்போட்டியின் மூலம் தலைமைத்துவம் ஒழுங்காகும் தன்மையும் வளர்ச்சியடை[illegible] எனலாம். பெரிய பட்டங்கள் உ[illegible]க்கப்படும் பொழுது கூட்டுழைப்பு முக்கியம் பெற்றது போல குழு ரீதியான போட்டிகளும் ஏற்பட்டன.

பட்டம் கட்டி ஏற்றுவது அவர் அவர் பொழுது போக்காக இல்லாது ஏற்றுதல் மாத்திரம் பொழுதுபோக்காக மாறும் பொழுது இது 'சந்தைத் தொழிலாக' மாறிவிடுவதையும் காணலாம். சிலர் 'பருவ காலத் தொழிலாக இதனை மேற்கொண்டு பலவகை பட்டங்கள் கட்டி விற்பனை செய்வதும் உண்டு. சில காலங்களிலே சில கடைகள் பட்டக்கடைகளாக பரிணமிக்கும்.

பொதுப்பட வடமராட்சியிலே ஏற்றப்படும் பட்டங்களை இதர - குறிப்பாக தென்னிலங்கைப் பகுதிப் பட்டங்கள், பிறநாடுகளின் பட்டங்களுடன் ஒப்பிடும்போது 'அழகுணர்ச்சி' மிகக் குறைவாகவே உள்ளது. பாம்புக்கொடிகள், வேதாளக்கொடிகள் ஆகியவற்றிலே உள்ள அழகியல் அம்சங்கள் ஒப்பிட்டு ஆராயப்படவேண்டியவை.

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே குறிப்பாக வடமராட்சிப் பிரதேசத்திலே இப்பகுதியிலேதான் பட்டம் ஏற்றல் ஒப்பீட்டு அடிப்படையிலே அதிகமான பழக்கத்திலே உள்ளது. பட்டம் ஏற்றல் இன்றும் பெரிதும் புழக்கத்திலே உள்ளது. இப்பிரதேசத்திலே பட்டம் ஏற்றலிலே ஆற்றல் பெரிதும் வெளிப்படுகின்றது. பெரிய பட்டங்கள் கட்டி மின் இணைப்புச் செய்து இரவிலே விண்ணிலே பட்டம் மின்னும்.

பட்டம் கட்டும் திறன் தற்சயம் குறைந்து வருவது அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இன்று கொக்கு, பருந்து, கட்டுக்கொடி ஆகியன ஏற்றுவது குறைவாகவே காணப்படுகின்றது.

அழகுணர்ச்சியும் திறனும் பட்டம் கட்டல், ஏற்றல் ஆகியவற்றிலே புதிய நாட்டம் காட்டப்படவேண்டும்.

வால் அறுந்த பட்டங்கள்
வானில்
கரணமடிக்கும்
நூல் அறுக்கப்பட்ட பட்டங்கள்
மரத்திலே கொழுவி
வானில் ஏறி
நிற்பதும் உண்டு.

"பட்டம் விடுவோம், பட்டம் விடுவோம் பாலா ஓடி வா" என்று பாலர் பாடல் சிறப்புடைய பொழுதுபோக்காக மாறவேண்டும்.

★



ஆவரங்கால் மேற்கு விவேகானந்த இந்து இளைஞர் மன்றத்தினால் யுவதிகளுக்கான தையல் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந நிலையத்தின் தொடக்க விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். அந்த நிகழ்வில் எடுக்கப் பட்ட படம். (ஒ-178)

### தேசிய போட்டிகளுக்காக

# துரையப்பா விளையாட்டரங்கை புனரமைக்க நிதி கிடைக்கவில்லை!

## மாநகராட்சி செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே28

யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள தேசிய விளையாட்டு விழாவிற்கென யாழ.துரையப்பா விளையாட்டரங்கை நவீன வசதிகள் கொண்ட ஒரு மைதானமாகப் புனரமைக்க ஒதுக்கப்பட்ட நிதி இதுவரை யாழ்.மாநகர சபைக்குக் கிடைக்கவில்லை. இதனால் மைதானப் புனரமைப்பினை ஆரம்பிக்க முடியாதுள்ளது.

- இவ்வாறு யாழ்.மாநகரசபையின் செயலாளர் எஸ்.குலநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது:-

தேசிய விளையாட்டு விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு இன்னும் சிறிது காலமே உள்ளது. அதற்கு அந்த மைதானம் சிறப்பான முறையில் திருத்தியமைக்கப்படவேண்டும். எனினும் அதற்கென ஒதுக்கப்பட்ட நிதி இதுவரை யாழ்.மாநகரசபைக்குக் கிடைக்கவில்லை. யாழ்.செயலகத்தினூடாகவே அந்த நிதி எமக்குக கிடைக்கும். யாழ்.செயலகத்துக்கும் அந்த நிதி இதுவரை அனுப்பி வைகக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

நிதி கிடைக்காமையால் புனரமைப்புப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. இது ஒரு மிகப்பெரிய வேலைத்திட்டம். இதனைக் குறுகிய காலத்திற்குள் செய்துமுடிக்க இயலாது வேலைகளைச் செவ்வனே செய்து முடிக்கவில்லையென்ற குற்றச்சாட்டும் மாநகரசபை மீது சுமத்தப்படக்கூடிய சாத்தியமும் உள்ளது. இதனால், எம்மால் இயன்றளவு வேலையை மட்டுமே நாம் செய்து தருவோம் என்று விளையாட்டு அமைச்சுக்குத் தெரிவித்துள்ளோம்.

இந்த புனரமைப்புக்கான திட்ட வரைபுகள் எல்லாவற்றையும் விளையாட்டு அமைச்சே தயாரித்துள்ளது. அந்த திட்டத்தின்படி வேலைகளைச் செய்வதுதான் மாநகரசபையின் பொறுப்பு . எனவே அது தன்னால் இயன்றளவு வேலைகளை மேற்கொள்ளும் என்றார் அவர்.

(ஒ-8)




பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் முதியோர்களுக்கான 'கௌரவ' சேமிப்பு கணக்கு ஆரம்ப வைபவத்தில் வாடிக்கையாளர்கள் [illegible] மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். முகாமையாளர் எஸ்.[illegible]னந்தம் மற்றும் வங்கி ஊழியர்களும் படத்தில் உள்ளனர்.

(படம் : வடமராட்சிச் செய்தியாளர்)

## உள்ளூராட்சி செயலர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே28

யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை 10.00 மணிக்கு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சித்திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான முகாமைத்துவப் போட்டி, உள்ளூராட்சி வாரம் திண்மக் கழிவு அகற்றல் தொடர்பான குழு அமைத்தல் மற்றும் உலகத் திட்ட வேலைகள் போன்ற முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாட இருப்பதால் அனைத்து செயலாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.ரி.கிருஸ்ணசாமி கேட்டுள்ளார்.

(ஒ-5)

# கண்ணிவெடி செயற்பாட்டுக்கு ஒருங்கிணைப்புச் செயலகம்

## கிளிநொச்சியில் நேற்றுத் திறப்பு

கிளிநொச்சி,மே28

சகலவிதமான கண்ணிவெடிச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான கண்ணிவெடி செயற்பாட்டு ஒருங்கிணைப்புச் செயலகம் நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த திறப்பு விழா நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முரளி ஏற்றிவைத்தார்.

ஈகச் சுடரினை அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான இணைப்பாளர் தியாகராஜா ஏற்றி வைத்தார். ஆஸ்திரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த அபராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிறுவன பெயர்ப்பலகையினை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராஜநாயகம் திரை நீக்கம் செய்து வைக்க இந்த அவலுவலகத்தை நாடாவை வெட்டி சர்வதேச தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் கலாநிதி மகேஸ்வரன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கண்ணிவெடி அகற்றுதல், கண்ணிவெடிகளை அடையாளம் காணுதல், கண்ணிவெடி விழிப்புணர்வு போன்ற செயற்பாடுகளை இலகுபடுத்தி ஒருங்கிணைந்து செயற்படுவதே இச்செயலகத்தின் பிரதான பணியாக இருக்கும் என தமிழர்புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி. றெஜி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வடபுலத்தை வளம்செய்ய வந்த
இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர்
**திரு.க.பாலசுப்பிரமணியம்** அவர்களையும்,
அன்னாரோடு உடன் நிற்கும் பெரியோரையும்

**வாழ்த்தி வரவேற்கின்றோம்!**

**வடபுலம் வளங்கள்காண வைக்கும்எம் பாலா ஐயா!**
**தொடங்கினர் இங்குகந்தோர் தொடர்கிறார் இனியசேவை**
**திடஉளம், பேரறிவு, திறமை சேர் AGMஐ.**
**வரம்பிலா மகிழ்ச்சியோடு வாழ்த்திநாம் வரவேற்கின்றோம்.**

களிபேருவகையுடன்:
**வடபகுதி அன்பர்கள்.**

(18493)

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்
## பொதுக்கூட்டம்

எமது சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் (30-05-2003) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 (புதிய நேரம்) மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர் கலைக் கல்லூரியில் நடைபெறும். அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

வே.மணிமாறன்
தலைவர்.

வே.சேந்தன்
செயலாளர்.

இல. 15/4, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

(18498)

# ஊடகவியலாளர் தாக்கப்பட்டமை குறித்து விசாரிக்க குழு வருகின்றது

யாழ்ப்பாணம்,மே28

மானிப்பாய், நெல்லியடி மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பாதுகாப்புப் படையினரால் ஊடகவியலாளர்கள் சிலர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசாரணைக்குழுவொன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒலிவர் பி.வீரசேன தலைமையிலான இவ்விசாரணைக் குழுவில் மக்கள் தொடர்பாடல் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஈ.ஜி. சந்திரரட்ணவும் அங்கம் வகிக்கின்றார்.

எதிர்வரும் ஜுன் மாதம் 4ஆம் திகதி யாழ்.வரும் இவ் விசாரணைக் குழுவினர் எதிர்வரும் 6ஆம் திகதி வரை யாழ். செயலகத்தில் தமது விசாரணைகளை நடத்துவார்கள்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின் விஷேட பணிப்பின் பேரிலேயே இவ்விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது.

நெல்லியடி, மானிப்பாய் மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஊடகவியலாளர்கள் சிலர் பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான பூர்வாங்க விசாரணைகளை மேற்கொண்டு பாதுகாப்பு அமைச்சருக்கு இக்குழு அறிக்கை சமர்ப்பிக்கும்.

இவ்விசாரணைகளுக்கு சமுகமளிக்குமாறு தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளர்களுக்கு அரச அதிபர் ஊடாகப் பாதுகாப்பு அமைச்சு கடிதம் அனுப்பியுள்ளது.

தாம் படையினரால் தாக்கப்பட்டது தொடர்பாக பூரண விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் எனக் கோரி யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்தமை தெரிந்ததே.

(ஒ-8-5)

## வடமராட்சி மேற்கில் உபதபாலகம்

மானிப்பாய்,மே28

வடமராட்சி மேற்கு இமையாணன் கிராமத்தில் உபதபால் அலுவலகம் ஒன்று திறக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இக் கிராமத்தில் உபதபாலகம் ஒன்று அமையவேண்டியதன் அவசியம் குறித்து இமையாணன் கலைமகள் சனசமூக நிலையத்தினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஏற்கனவே தெரியப்படுத்தியிருந்தனர் எனவும் கூறப்பட்டது.

(ஒ-9-90)

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான "ஞானச்சுடர்" ஆத்மீக சஞ்சிகையின் வைகாசி மாத இதழ் வெளியீட்டு விழா எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும்.

சஞ்சிகையின் வெளியீட்டுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் து.கணேசமூர்த்தியும், மதிப்புரையை செஞ்சொற்செல்வன் இரா.செல்வவடிவேலும் நிகழ்த்துவர்கள். (ஒ-173)

## 385 பேருக்கு 'மஹாபொல' புலமைப்பரிசில்

மஹாபொல உயர்கல்வி புலமைப் பரிசில் வழங்கும் விழா எதிர்வரும் சனிக்கிழமை யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 385 மாணவர்களுக்கு 'மஹாபொல' புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது. இப்புலமைப் பரிசில் பெறுவோர் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் நலன்புரி நிலையத்தில் தமது பதிவினை உறுதிப்படுத்திக் கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## வெடிபொருளை உடைத்த சிறுவன் படுகாயம்!

வரணி,மே28

படையினர் அண்மையில் விலகிய இடத்திலிருந்த வெடிபொருளை எடுத்து வந்த சிறுவன் அதனை வீட்டில் வைத்து உடைத்தபோது அது வெடித்ததில் சிறுவனின் கைப்பகுதி சிதறியது.

கடந்த 19ஆம் திகதி வரணி கரம்பைக் குறிச்சிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் முகமாலைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கரம்பைக் குறிச்சியில் வதியும் கணேசமயூரன் (வயது 17) என்பவரே படுகாயமடைந்தவராவார். படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-9-170)

## கசிப்பு வழக்கில் மூவருக்கு அபராதம்

கசிப்பு உற்பத்திசெய்த மூவருக்கு யாழ். நீதிமன்றம் 36 ஆயிரம் ரூபா அபராதமாக விதித்துள்ளது.

முத்தமிழ் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துரைராஜா பூமலர், ராஜசிங்கம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த றோமன் அனிட்டா, பழைய பூங்காவீதி, சுண்டுக்குளியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் ஆகிய மூவருக்குமே தலா 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் தலா 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.(ஒ-8)


SHARP ஜப்பானியத் தொழினுட்பம் இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
be sharp



உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப் பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

Browns Electronics Live it up
BROWNS GROUP BG ESTD 1875
Browns Group of Companies

SHARP

இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150


## வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

எமது சபையில் 2003ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழ்க் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப்பத்திரப் பணத்தையும் செலுத்தி படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 28.05.2003 - 04.06.2003 நண்பகல் 12.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 05.06.2003 நண்பகல் 12 மணிவரை
03. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:- 05.06.2003 பிற்பகல் 2 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்விகளை ஏற்கவோ அன்றேல் மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.
05. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு ஒரு பிரதி அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபாலில் அல்லது தலைமைக்காரியாலயத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக் கூடியதாகவும் மறுபிரதி உ.உ.ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கும் அனுப்புதல்வேண்டும்.

| வேலை விவரம் | | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | வற்வரி 20% |
|---|---|---|---|---|
| 01. | நவாலி வடக்கு சி.எஸ்.ஐ. வீதி மீள் புனரமைப்பு | 2,500/- | 300/- | 60/- |
| 02. | சண்டிலிப்பாய் பழைய கராஜ் முன் வீதி மீள் புனரமைப்பு | 3,500/- | 300/- | 60/- |

(பி.விக்ரர்),
செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(சி-28116)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பரீட்சைகள்

1. கலைமாணி பகுதி II - 2001
2. கலைமாணி பகுதி I - 2001

மேற்படி பரீட்சைகள் 16.06.2003 தொடக்கம் 15.07.2003 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளன.

1. கலைமாணி பகுதி II – 2001 – 16.06.2003 தொடக்கம் 30.06.2003 வரை
2. கலைமாணி பகுதி I – 2001 – 01.07.2003 தொடக்கம் 15.07.2003 வரை

நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும் வவுனியா வளாகத்திலும் பின்வரும் திகதிகளில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. கலைமாணி பகுதி II – 2001 – 10.06.2003 தொடக்கம்
2. கலைமாணி பகுதி I – 2001 – 24.06.2003 தொடக்கம்

மேலதிக விவரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

குறிப்பு: கலைமாணி பகுதி I-2000 பெறுபேறுகள் 30.05.2003இல் வெளியிடப்படும். மீள் பரீட்சார்த்திகள் 30.05.2003 முதல் 10.06.2003 வரை மீள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

பதிவாளர்.
27.05.2003

(சி-28115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளத்தில் ஆளும் கட்சி எம்.பி. கைதாகி பிணையில் விடுதலை

## எதிர்க்கட்சி ஆதரவாளரின் வீட்டுக்குள் புகுந்து அட்டகாசமாம்

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர் ஒருவரின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து அங்குள்ள பொருள்களை சேதப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆளும் கட்சி எம்.பி. ஒருவர் கைதாகி பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம புத்தளத்தில் இடம்பெற்றது.

தனது வீட்டுக்குள் நுழைந்த ஆளும் கட்சியின் குறிப்பிட்ட எம்.பி. அங்கிருந்த பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த பொருள் களைச் சேதப்படுத்தினார் என்று பிரஸ தாப ஆதரவாளர் பொலீஸில் முறைப் பாடு செய்ததை அடுத்து எம்.பியை இரகசியப்பொலீஸார் கைது செய் தனர். புத்தளம் மாவட்ட நீதிவான் அமல் திலகரத்தினா முன்னிலையில் அவரை ஆஜர்செய்தனர்.நீதிவான் அவரை 30 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 60 ஆயிரம் ரூபா சரீரப்பிணையிலும் விடுதலை செய்து மேல் விசாரணையை ஜூன் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஐ)

# கெற்பேலிக் கடலில் மீன்பிடிக்க தொடர்ந்தும் கட்டுப்பாடுகள்

தென்மராட்சி,மே28

மிருசுவில் கெற்பேலிக்கடலில் மீன்பிடிப்பதற்குப் படையினர் விதித்த கட்டுப்பாடு நீக்கப்படாததால், இக்கடலில் தொழில் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டது.

காலை 6 மணிக்கு கடலுக்கு செல்ல அனுமதிக்கப்படும் மீனவர்கள் முற்பகல் 10 மணிக்குள் கரை திரும்ப வேண்டும் இல்லையேல் கடலுக்குச் செல்லும் பாதையை படையினர் மூடி விட்டு பிற்பகல் 2 மணிக்கே மீண்டும் திறக்கின்றனர். தாமதித்து கரைக்கு வரும் மீனவர்கள் இதனால், மீனுடன் கடற்கரையில் காத்திருக்க நேரி டுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின றது.

தினமும் காலை 6 மணி தொடக கம் முற்பகல் 10 மணிவரையும் பிற்பக லில் 2 மணிதொடக்கம் 4 மணிவரை யுமே இக்கடலில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டது.

இதேவேளை - கச்சாய் கடல் ஏரி யில் பகல் முழுவதும் கடலில் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது.

கெற்பேலி கரையில் இருந்து 4 கடல் மைல் தூரத்திற்கு கடலில் நடந்து சென்று மீனவர்கள் மீன்பிடிப் பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# உவர்நீர்த் தடுப்பு அணைகள் 'நியாப்' திட்டத்தின் கீழ் அமைப்பு

யாழ்ப்பாணம்,மே28

'நியாப்' திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தில் மூன்று உவர் நீர் தடுப்பு அணைகளையும் 10 குளங் களையும் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- இவ்வாறு யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காரைநகர்ப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சாம்பலோடை உவர் நீர் தடுப்பணையும், வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் சரவணை உவர்நீர் தடுப்பணையும். ஊர்காவற் றுறை பிரதேச செயலாளர் பிரிவில குறுக்குக் கடல் உவர்நீர் தடுப்பணை யும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் கரவெட்டிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள உடுப்பிட்டி தெற்குகிராய்குளம், உடுப்பிட்டி விராச்சி குளம், இமையாணன் மேற்கு துவாளிக்குளம், அத்தாய் ஒந்திராய் குளம், மத்தொனி தாழங்குளம், துன்னாலை தெற்கு தாமரைக்குளம், துன்னாலை வடக்கு சிலந்திக்குளம், புலோலி தெற்கு கொட்டுக்கேணிக் குளம், குடத்தனை கிழக்கு மேற்சாளம் பைக்குளம் ஆகியன புனரமைக்கப் பட்டு வருகின்றன.

இவற்றால் 3ஆயிரத்து 110 பயனாளிகள் பயன்பெறுவர் என்று அவா தெரிவித்தார்.


STUDY IN INDIA

NRI INSTITUTE

Affiliated to Banglore University, Recognised by the Government Karnataka and Approved by AICTE, New Delhi.

SPOT ADMISSION

For the year 2003 - 2004

Admissions are opened for the following courses.

| | |
|---|---|
| Bachelor of Computer Application B.C.A.* | 3 years |
| Bachelor of Business Management B.B.M. | 3 years |
| Bachelor of Hotel Management B.H.M. | 4 years |
| B.S.C. (Micro Biology) | 3 years |
| Bachelor of Commerce B. Com. | 3 years |
| Pre. University Course - equivalent to A/L. | |

Eligibility ➢

G.C.E. Exam .Conducted by the Dept. of Examinations, Sri lanka, with Passes in

a) 5 Subjects at the O/L and 2 Subjects in A/L

OR

b) 4 Subjects at the O/L and 3 Subjects in A/L

For Details & Admission

Contact,

Keshav V.R. Rao,
Director
NRI Institute(Bangalore)
India.

K.Ahilan,
3/3, P.T.DE Silva M.W.,
Dehiwala .
T.P. 01737428
0777 - 173223

At - NO. 40, Kandy Road,
Old Park Chinese Restaurant,
(OPP. SLRC), Jaffna.
T.P - 0777 - 563569.

Today 28.05.2003
Between 9.30 A.M and 7.00 P.M

(18507)


## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம்,மே28

பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை மற்றும் திருநாவுக்கரசு வித்தியாலயம் ஆகியன இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல 2 மணிக்கு வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் ஆலய வீதியில் நடைபெறும்.

இரு பாடசாலைகளினதும் அதி பர்களான க.நடராசா, அ.அருணகிரி நாதன் ஆகியோரின் தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டு விழா வில் சங்கானை கல்விக் கோட்ட அதிகாரி சி.செல்லையா பிரதம விருந் தினராகவும், வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் எஸ்.வி.புவ னேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ-6)

## பரீட்சை மண்டபம் இடம் மாற்றம்

வட இலங்கை சங்கீத சபையின் தரம் 5, 6 தேர்வு நாடிகளுக்கு நாளை 29 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருந்த செய் முறைப் பரீட்சைகள் அதேதினம் இராம நாதன் கல்லூரியில் இடம்பெறும் என்று யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-6)

## வேலணை பிரதேச சபை கேள்வி அறிவித்தல் -2003 திருத்தம்

நேற்றைய உதயனின் 10ஆம் பக்கத்தில் வெளியான மேற்படி தலைப் பிலான கேள்வி அறிவித்தல் விளம் பரத்தில்-

ஒப்பந்தகாரர்கள் கொண்டிருக்க வேண்டிய தகுதிகளில் மூன்றாவதாகக் குறிப்பிடப்பட்ட பந்தி பின்வருமாறு இருக்கவேண்டும்.

கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்ததன்மை யிலான ஒப்பந்தங்களை திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள் ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண் டிருத்தல் வேண்டும். இது வாடிக்கை யாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் ஆதர வளிக்கப்படவேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரல் ஒன்றை வழங்குமாறு கேள்வியிடுவோர் வேண் டப்படுகின்றனர்.

### தவறிவிட்டது

குணரட்ணம் சுகுணா என்பவரது தேசிய அ.அ. (786972361V), பாடசாலை அ.அ., திருகோணமலை மாவட்ட அடையாள அட்டை என்பன மார்ச் மாதம் தவறிவிட்டன. அவற்றை வைத்திருப்பவர்கள் பின்வரும் முகவரி யில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

S.றோமன் ஜெபரெத்தினம்,
மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம். (18459)


நிறைஞ்சனாஸ் சங்கானை

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, நாகேஸ், வி.கே.இராமசாமி நடித்த

இரகசியப் பொலிஸ் 115 (ரீஸ்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு

CASTAWAY

(C27606)

நாகம்ஸ் சுன்னாகம்

சரத்குமார், சுகன்யா, ரகுவரன் நடித்த

கேப்டன் (ரீஸ்ஸ்)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பு.நே.)

வெள்ளி,சனி,ஞாயிறு விசேடகாட்சி 7.00 (பு.நே.) (18494)

ராஜா யாழ்ப்பாணம்

மூன்றாவது வாரம்

விஜய், மீராஜஸ்மின், கருணாஸ்



புதிய கீதை

காட்சிகள் :10.30, 2.30, 6.30,

சனி, ஞாயிறு 10.30, 2.30, 6.30, 9.30

(C/27626)

லிபேட்டி அச்சுவேலி



ஸ்ரீகாந்த், பூமிகா, விவேக்,ரகுவரன் ராதிகா நடித்த

11.00, 3.00, 7.00 (பு.நே) (ரீஸ்ஸ்)


# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
வை.சாரங்கனின் அன்புத் தந்தையார்

## மாணிக்கசாமி வைத்தீஸ்வரன்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(18508) 24 ஆம் அணி, மருத்துவபீடம்.

# துயர் பகிர்கின்றோம்

யாழ்.மருத்துவ பீட 24ஆம் அணியைச் சேர்ந்த மாணவன் சாரங்கன் அவர்களின் அன்புத் தந்தையார்

## மாணிக்கசாமி வைத்தீஸ்வரன்

அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம். (18502) 25ஆம், 26ஆம் அணி.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 1951 - 09 - 15



உதிர்வு 2003 - 04 - 28

## அமரர் வல்லியர் முருகையா (ஏழாலை)

அன்பான எங்கள் குல விளக்கே!
அனைவரையும் அரவணைத்த தெய்வமே!
பாசத்தின் சுமையோடு சென்ற அப்பாவே!
பிறப்பிலும் நேசித்தோம் இறப்பிலும் ~
உமை மறவோம் அப்பா

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

மு.பிரபாகரன்,
சிவகுரு வீதி,
ஏழாலை மத்தி, ஏழாலை. (18503)

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## விஸ்வநாதர் இளையதம்பி

(இரட்டையர்)

சுன்னாகம், வரியப்புலத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வநாதர் இளையதம்பி நேற்று(27.05.2003) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் புவனேஸ வரி, இராசேஸ்வரி, திலகேஸ்வரி, மகேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினம், சிவசுப்பிரமணியம், துரைசிங்கம்,சிவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2003) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரியப்புலம்,
சுன்னாகம். (18505)

தகவல்:
மகேந்திரன்(சைவம்)
(மகன்)

## மாணிக்கசாமி வைத்தீஸ்வரன்

(ஓய்வுபெற்ற காணிப்பதிவாளர், யாழ்.மாவட்டம்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது சுன்னாகத்தில் வசித்தவருமாகிய மாணிக்கசாமி வைத்தீஸ்வரன 26.05.2003 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் புஸ்பராணியின் அன்புக்கணவரும் சாரங்கன், பிரகலாதன், வாமணன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் உமாதேவியின் அன்புச் சகோதரனும் பாலச்சந்திரன், ஜெயபாலன், சிவபாலன், தாட்சாயினி, ரோகினி, வாசுகி, சசிமளா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3.00 மணி யளவில் சுன்னாகம் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.5, அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (18501)

தகவல்:
சாரங்கன்(மகன்)

## குமாரசாமி ரவீந்திரன்

நல்லூர், மூத்த விநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி ரவீந்திரன் நேற்று (27.05.2003) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் சி.குமாரசாமி மற்றும் தங்கரத் தினம் தம்பதிகளின் அன்புமகனும் ரஞ்சினிதேவி, சிறிதரன், பவானி (முன்பள்ளி ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ந.லோகநாதனின் (இராமநாதன் கல்லூரி, உசன்) அன்பு மைத்துனரும் திரு. திருமதி சிவபாலன் கனகமணி அவர்களின் அன்புமருமகனும் திரு. திருமதி கந்தசாமி, சிவசோதி அவர்க ளின் பெறாமகனும் பிருந்தாவின் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) அன்பு மாமனாரும், லவீந்திரன், பார்த்தீபன் (கனடா), துசாயினி, துளசி, டினேஸ் கரன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (C28123)

தகவல்:-
கு.சிறீதரன் (சகோதரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி லொத்தர் சபை கையேற்பு விவகாரம்:

# அரசாங்க அச்சகருக்கான உத்தரவை உடன் வாபஸ் பெறாவிடின் நடவடிக்கை

### பிரதமருக்கு ஜனாதிபதி எச்சரிக்கைக் கடிதம்

கொழும்பு,மே28

அபிவிருத்தி லொத்தர் சபையைப பொறுப்பேற்று தான் பிறப்பித்த உத்தரவை அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தலை அச்சிடவேண்டாமென மக்கள் தொடர்பாடல் அமைச்சர், அரசாங்க அச்சகருக்குப் பிறப்பித்த சட்டவிரோத உத்தரவை உடனே வாபஸ் பெறுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக்கேட்டிருக்கிறார்

நேற்றுமுன்தினம் பிரதமருக்கு அனுப்பியிருக்கும் கடிதம் ஒன்றில் இவ்வாறு கேட்டிருக்கும் ஜனாதிபதி, அந்த உத்தரவு வாபஸ் பெறப்படாவிட்டால் அது தொடர்பாக சரியான நடடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவித்திருக்கிறார்.

• கடந்த 13ஆம் திகதி தான் பிரதமருக்கு எழுதிய கடிதத்துக்கு இதுவரை பதில்கிடைக்காததாலேயே இக்கடிதத்தை எழுதுவதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

கடிதத்தில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:- கடந்த 11 ஆம் திகதி சட்டமா அதிபர் எனக்கு எழுதிய கடிதத்தில் (மேற்படி விடயம் குறித்து நான் ஆலோசனை கோராத போதிலும்) கடமைகள், பொறுப்புக்களை கைமாற்றும் போது, பிரதம மந்திரியுடன் நான் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும், அவ்வாறான கலந்தாலோசனை அவசியமானது என்றும் தனது கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

என்னால் ஏற்படுத்தப்பட்ட மாற்றம குறித்து அவ்வாறான ஆலோசனை தேவையற்றதாகும் என்பது எனது கருத்து. ஆலோசனை நடத்த தவறுவது எனது தீர்மானம் சட்ட விரோதமானது, முரணானது என்ற நிலைக்கு உள்ளாகும் என்பதை சட்டமா அதிபா தெரிவிக்கவில்லை.

அபிவிருத்தி லொத்தர் சபை பற்றிய எனது தீர்மானமும் அது பற்றிய உத்தரவும் அரசமைப்புச் சட்டத்துக்கு ஏற்புடையதாகும் என்பது குறித்து நான் திருப்தியடைகிறேன். இதற்கு மாறான கருத்தை எந்த ஓர் அரசாங்க அதிகாரி யாவது அல்லது அமைப்பாவது கொண்டிருந்தால் சட்ட உதவியை நாடலாம்.

சம்பந்தப்பட்ட அறிவிப்பை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவது 'சட்டவிரோதமான தாகும்' என்று மக்கள் தொடர்பாடல் அமைச்சர் பெறநிருக்கும் ஆலோசனை குறித்து எனக்கு அக்கறையில்லை. வர்த்தமானி அறிவித்தலை வெளியிட வேண்டாமென அவர் அரசாங்க அச்சகருக்கு வழங்கிய உத்தரவு சட்ட விரோதமானதாகும்.

- இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

# லொத்தர் சபைத் தலைவருக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல் கடிதம்

அபிவிருத்தி லொத்தர் சபையின மீண்டு வரும் கொடுப்பனவு தவிர்ந்த ஏனைய கொடுப்பனவுகளை உடன் நிறுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க லொத்தர் சபையின் தலைவர் ஜே.கே.பெர்னாண்டோவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். லொத்தர் சபை தொடர்பான புதிய பிரசார விளம்பரத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவை பற்றிய விரைத் திட்டங்களைத் தம்மிடம் சமர்ப்பிக்கும்படியும் வேலைக்கு ஆள்களை தற்காலிமாக அல்லது நிரந்தரமாகப் புதிதாக நியமிப்பதை நிறுத்துமாறும மேமாதம் 8ஆம் திகதி லொத்தர் சபையை தாம் பொறுப்பேற்றதன் பின்னர் சபை மேற்கொண்ட ஒப்பந்தங்கள், நியமனங்கள் தொடர்பாக தமக்கு அறிவிக்குமாறும் ஜனாதிபதி தமது கடிதத்தில் சபைத் தலைவருக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை, தாம் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் உத்தரவுக்கமையவே செயற்படுவதாக அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் பெர்னாண்டோ தெரிவித்தார். ஜனாதிபதியின் கடிதம் அமைச்சர் மூலம் அனுப்பப்படுமானால் தாம் அதனை நிறைவேற்றுவார் எனவும் அவர் மேலும தெரிவித்தார்.

தமது உத்தரவுகளை அபிவிருத்தி லொத்தர் சபை நிறைவேற்றாவிட்டால தலைவர் உட்பட பணிப்பாளர் சபையை மாற்றி அமைக்க வேண்டிவரும் என ஜனாதிபதி முன்பு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### வவுனியாவில் ரி - 56 துப்பாக்கி மாயம்

வவுனியா,மே28

வவுனியா - மன்னார் வீதியில் உள்ள 'செக்ரர் - 1' பொலீஸ் முகாமிலிருந்து நேற்று முன்தினமிரவு ரி - 56 ரகத் துப்பாக்கி ஒன்று காணாமற்போயிருப்பதாகப் பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலீஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

இதேவேளை -

பிஸ்டல் குழுவைச் சேர்ந்தவர்கள் எனக்கூறப்படும் இருவர் வவுனியாப் பகுதியில் நடமாடி வருகின்றனர் என்று வவுனியா பொலீஸ் நிலைய புலனாய்வுப்பிரிவினர் தகவல் வெளியிட்டிருக்கின்றனர். அரசியல் வாதிகளை இலக்கு வைத்தே இவர்கள் அங்கு ஊடுருவியிருக்கின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஐ-164)

### வடஅயலாந்து அரசியல் பிரமுகர் இலங்கைக்கு விஜயம்

வடஅயர்லாந்தின் முற்போக்கு ஐக்கியவாதக் கட்சியின் தலைவர் டேவிட் போவேன் இலங்கைக்கு ஆறுநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

வடஅயர்லாந்து மோதலை சமாளிப்பதில் தனக்குள்ள அனுபவங்கள் சிலவற்றை பகிர்ந்து கொள்வதன் மூலம் அமைதி வழிமுறைக்கு உதவி செய்ய முடியும் என தாம் நம்புவதாக அவர் தெரிவித்தார். (ஐ-12)

### கொழும்பு சென்றவர் திரும்பவில்லை

கொழும்பில் நடைபெற்ற திருமண வைபவம் ஒன்றுக்காகச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை,அராலி தெற்கைச் சேர்ந்த கந்தையா இரத்தினம் (வயது64) என்பவரே இதுவரை வீடு வந்துசேரவில்லை என அவரது உறவினரால் முறையிடப்பட்டுள்ளது.

தெஹிவளையில் நடைபெற்ற உறவினருடைய திருமண வீட்டிற்கு சென்ற மேற்படி நபர் கடந்த 18 ஆம திகதி கொழும்பிலிருந்து ரயில் மூலம் வவுனியா புறப்பட்டார் என்றும் -

வரும்போது சிறுதொகைப் பணமும் வங்கிப்புத்தகமும் கொண்டுவந்தார் எனவும் - கூறப்படுகிறது.

இவர் வீடு வந்து சேராமை தொடர்பாக கொழும்பிலுள்ள உறவினரிடம விசாரித்தபோதும் தகவல் ஏதும் கிடைககவில்லை என தெரிவிக்கப்பட்டது.

### கிரனேட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிரனேட் வெடித்ததால் அவரது நெஞ்சுப் பகுதி, இடது கை என்பன சிதறுண்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு சாவகச்சேரிப பொலீஸார் சகிதம் சென்ற சாவகச்சேரி நீதிவான் சடலத்தை கொழும்புக்கு அனுப்பி, சட்ட வைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை செய்து, பிரேத பரிசோதனை அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டார். (ஐ-3-31-117)

### படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் பிரதிநிதிகள் இந்தப் பணியில் ஒன்றாக ஈடுபடுவர் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்தப் பணியில் தங்கள் தரப்புப் பிரதிநிதிகள் எவரும் இன்று ஈடுபடமாட்டார்கள் என்று விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை பிரதிநிதி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

படையினர் நிலைகொண்டிருக்கும் கட்டடங்களின் விவரங்களைச் சேகரிக்கும் இந்தப் பணியில் ஈடுபடுவதற்கு பிரதேச ரீதியாக தலா ஒவ்வொரு பிரதிநிதியை அனுப்புமாறு கண்காணிப்புக் குழு நேற்றுக் காலையில்தான் தங்களுக்கு அறிவித்தது என்றும், அவ்வாறு பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு கால அவகாசம போதாமையால் தாங்கள் இப்பணியில் பங்குகொள்ள முடியாதிருப்பதாகவும அவர் கூறினார். அத்துடன் பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்குள் உள்ள கட்டடங்கள் பற்றிய விவரங்களைச் சேகரிக்க புலிகளின் பிரதிநிதிகள் அங்கு செல்ல முடியாது என்று தமக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும், அவ்வாறு அந்தப் பகுதிகளுக்குள் செல்ல அனுமதிக்காவிட்டால் சேகரிக்கப்படும் புள்ளிவிவரங்கள் முழுமையானவையாக இருககாது. எனவே அதை ஏற்க முடியாது என்றும் புலிகளின் அரசியல்துறைப் பிரதிநிதி தெரிவித்தார்.

விவரம் சேகரிக்கும் இந்தப் பணியில் அரசு அதிகாரிகள் எவரும் இன்று கலந்துகொள்ளமாட்டார்கள் என்றும் தெரியவந்தது. (ஐ-3)

## புலிகளுக்கு பிரதமரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரிவாகக் கலந்துரையாடினார்.

அதையடுத்து எரிக் சொல்ஹெய்ம் நேரடியாக லண்டனுக்குச் சென்று பிரதமரின் பதிலை பாலசிங்கத்திடம் சமர்ப்பித்து, புலிகளின் முடிவை அவரிடம் நேரடியாகக் கேட்டு வரலாம் என முதலில் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், புலிகளுக்கான பிரதமரின பதிலை நேரடியாக கிளிநொச்சியில் புலிகளின் அரசியல் செயலகத்துக்கு அனுப்புவதே பொருத்தமானது என்பதால் கிளிநொச்சியுடன் தொர்டர்பு கொள்ளும்படி அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அதனையடுத்து எரிக்சொல்ஹெய்ம் பிரதமரின் பதிலை கிளிநொச்சிக்கு எடுத்துச் சென்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனிடம் அதை ஒப்படைத்து, புலிகளின் முடிவை அவரிடம் கேட்டு வரலாம் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது.

ஆனால், அரசின் பதில் தொடர்பான புலிகளின் முடிவு உடனடியாக எடுக்கப்படக் கூடியதல்ல என்ற விளக்கம் புலிகளால் வழங்கப்பட்டது.

புலிகளின் தலைமை தமக்குள்ளும், மதியுரைஞர் பாலசிங்கத்துடனும விரிவாகக் கலந்துபேசி ஆராய்ந்த பின்னரே ஒரு முடிவுக்கு வர முடியும் என்றும், அதற்கு சில நாள்கள் தேவை எனவும் கூட சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, பிரதமரின் பதிலை 'பக்ஸ்' அல்லது மின் அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தாலே போதுமானது என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், அந்தப் பதிலை உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்க வேண்டிய தேவை இருப்பதாக ஆரம்பத்தில் கருதப்பட்டதால் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் மூலம் அதனை நேற்று கிளிநொச்சியில் ஒப்படைக்கச் செய்வதற்குப் பின்னர் திட்டமிடப்பட்டது.

எனினும், அதுவும் அவசியமானதல்ல என்றும் ஏதேனும் ஒரு வகையில் பிரதமரின் பதில் வந்து சேர்ந்தால் போதும் என்றும் புலிகள் தரப்பிலிருந்து கிடைத்த தகவலை அடுத்து மின் அஞ்சலில் இன்று அதனை அனுப்பி வைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடயம் குறித்த நிலைமையைத் தெளிவுபடுத்தும்படி மதியுரைஞர் பாலசிங்கம், நோர்வே வெளிவிவகார அமைச்சருக்கே முகவரியிட்டு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தை நோர்வேத் தரப்பே பிரதமருக்கு அனுப்பியிருந்தது.

எனவே, பிரதமரும் தமது பதிலை நோர்வே வெளிவிவகார அமைச்சருக்கே முகவரியிட்டு தற்போது அனுப்பியுள்ளார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் தமது தரப்பு ஊடாக அதனைப் புலிகளின் பரிசீலனைக்கு மின் அஞ்சல் மூலம் இன்று அனுப்பி வைப்பார்.


THE JAFFNA EDUCATION CENTRE
யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)
SPOKEN ENGLISH WITH GRAMMAR
சிங்களம
SHORT HAND TYPING
(இரு மொழிகள் மூலமும்)
ஆகிய பாடங்கள் இலகுவான முறையில் எழுத, வாசிக்க, கதைக்கக் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்: 31.05.2003
பயிற்சிமுடிவில் சான்றிதழ் வழங்கப்படும். நிர்வாகி:இ.லோகநாயகி.
(18470)

CHEMISTRY CENTRE
பலாலி வீதி, கந்தர்மடம்.
A/L 2005
GENERAL CHEMISTRY
ஆரம்பம்:30.05.2003
Mon.,Fri.3-4 p.m.
வெப்ப இரசாயனம்
ஆரம்பம்:02.06.2003
Mon.6.30-7.30 a.m.
By: அன்பழகன்
(c/28113)

சித்த மருத்துவர்களால் சித்தர்கள் கூறியபடி தயாரிக்கப்பட்ட
தலைமுடி உதிர்தல், தலையிடி, இளநரை போன்றவற்றிற்கான
சுஜெ பொன்னாங்காணித்தைலம்
பாலர் ரோகங்களுக்கான
சுஜெ பாலர் குரத்தி எண்ணெய்
என்பவற்றைப் பெற்றுக்கொள்ள
சுஜெ சித்த மருத்துவ நிலையம்
83,கச்சேரி, நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(18185)

உடனடி வேலை வாய்ப்பு
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உணவகத்திற்கு பின்வருவோர் உடன் தேவை.
❖ பில் கிளார்க் (A/L வர்த்தகம்)
❖ சமையல் ஆள்(உள்ளூர். Chinease)
❖ பரிமாறுபவர் (Waiter)
❖ கொத்துரொட்டி போடுபவர்
அனுபவம் உள்ளவர்களுக்கும், நற்பண்புள்ளவர்களுக்கும் முன்னுரிமை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்பு நேரம்: பி.ப.2.00 - 4.00 p.m.
சண்ஜெய பூட்லண்ட்
414,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(18445)

நாங்கள் வழிகாட்டுகிறோம்
C#
C++
Java
Visual C++
Visual Basic
Visual Foxpro
CC
தகுதியும் திறமையும் மிக்க நீண்ட கால அனுபவமுடைய விரிவுரையாளர்களின் நேரடி நெறிப்படுத்தலின் கீழ் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
Diploma in Computer Programming
Diploma in Information Technology
Diploma in Desktop Publishing
Diploma in Web Designing
And Certificate Courses
விவரங்களுக்கு: இயக்குநர், கணனிக் கல்லூரி.
337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

NEW SCIENCE COLLEGE
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்
இணைந்த கணிதம் (A/L- 2004)
(A/L- 2003 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு)
பிரிவு I
அனைத்து அலகுகளும் உள்ளடக்கிய மாதிரி வினாத்தாள்கள் மீட்டல்
mon.,tue.,wed.,thu.,fri. (6-7a.m.)
ஆரம்பம்: 02.06.2003 (பழைய நேரப்படி)
பிரிவு II
அலகுரீதியான மீட்டல்
sat.& sun.
(11.00-1.00 a.m.)
ஆரம்பம்: 31.05.2003
(18465)
ஆசிரியர் ப.செந்தில்நாதன் B.Sc.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org